விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka






# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 134 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 19 வெள்ளிக்கிழமை (02.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



## நல்லை ஆதீன குரு முதல்வர் தேகவியோகம் அடைந்தார்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் இரண்டாவது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் நேற்று வியாழக்கிழமை (1) இரவு 9.45 மணியளவில் கொழும்பில் தேகவியோகம் அடைந்துவிட்டார்.

மருத்துவ சிகிச்சைக்காக கடந்த 29ஆம் திகதி கொழும்பு சென்றிருந்த சுவாமிகள் தொடர் மருத்துவ சிகிச்சை பெறும் பொருட்டு கொழும்பு கம்பன் கோட்டத்தில் தங்கியிருந்தார்.

இந்நிலையில் நேற்று இரவு 9.45 மணியளவில் அவரின் உயிர் பிரிந்தது. சுவாமிகளின் திருவுடல் கொழும்பிலிருந்து இன்று (02) 04ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் மக்களை கைவிட மாட்டோம்

## மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை நாம் ஒருபோதும் கைவிடப் போவதில்லை. அவர்களின் அடிப்படை உரிமைகளை எமது அரசாங்கம் கட்டாயம் உறுதி செய்யும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பகிடிவதை பல்கலை மாணவன் உயிர்மாய்ப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## பேருந்து சேவையில் விரைவில் அட்டை கட்டண முறை


(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும் தனியார் போக்குவரத்துத் துறைக்கும் அட்டைக் கட்டண முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று போக்குவரத்து பிரதி அமைச் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் இராணுவ வசமிருந்த 40.7 ஏக்கர் காணி விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்து வந்த 40.7 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு மக் 15ஆம் பக்கம் பார்க்க



## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதில் தாமதம்

### அநுர அரசிடம் அதிருப்தி வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

2017ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட வாக்குறுதியை மீறி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதில் ஏற்படும் தாமதம் குறித்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் கண்காணிப்புக் குழு அரசாங்கத் திடம் 15ஆம் பக்கம் பார்க்க

## அரசுக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்க அணிதிரள்க

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறைகூவல்



(தலவாக்கலை)

"எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து, அரசாங்கத்துக்கு சிவப்பு எச்சரிக்கையை வழங்குவதற்கு மக்கள் அணி திரள வேண்டும்" என்று 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்துக்கு

### 14 தமிழர்கள் பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாகசேவை தரம் 1ஐச் சேர்ந்த 23 அதிகாரிகள் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நிர்வாக சேவை விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். இதில் 14 தமிழர்கள் உள்ளடங்குகின்றனர்.

2025-01-01 முதல் இந்தத் தர உயர்வு 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

# சேனாதிராசா செல்லக்கண்டு



பிறப்பு 19.06.1934 இறப்பு 01.05.2025

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட சேனாதிராசா செல்லக்கண்டு அவர்கள் நேற்று 01.05.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையா சேனாதிராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான தியாகராசா, அன்னபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இந்திராணி, செல்வநாயகம், சுகந்தமலர், தவமலர், முருகானந்தன், வேல்முருகன், தங்கமலர், ராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் கதிர்காமத்தம்பி, சகுந்தலாதேவி, செல்வரட்ணம், காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், மோகனமலர், இராஜகன்னிகா, சிவநேசன், பியுலா ஆகியோரின் அன்பு மாமியாரும் லோகேஸ்வரன் - சியானி, சஜீவன் - தர்சனா, ரஜீவன் - சோபிகா, அபர்ணா - இளங்கீரன், கம்ஷி - ஆனந்த், துசிகா - அரூரன், சோபிகா - ரஜீவன், செந்தூரன் - வனஜா, சிந்துஜா - அவைஸ், ஆரூரன் - துசிகா, அர்ச்சனா - நிராஜ், நிரோஜினி, திருவரன், அகிலினி, யோகரூபன், அபிநயா - கஜேந்திரன், சகானா, கிருஷாந்த் - தர்சினி, சேயோன் - சபிதா, சேயாள், சேந்தன், தேவகி - அகிலன், தெய்வச்சந்திரன் - வாணி, தேணுகா - ஜெயப்பிரகாஷ், கரிஷ்மா, ரஜீவ்குமரன், டன்யாஸ்ரீ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சே.வேல்முருகன்
(மகன் - veka)
அம்மன் கோவில் வீதி,
கோண்டாவில்.
077 969 7111

(1085)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் நடைபெற்ற மே தினப் பேரணி






(யாழ்ப்பாணம்)

**தொழிற்சங்கங்கள், வெகுஜன மற்றும் சிவில் அமைப்புகளுடன் இலங்கை ஆசிரியர் சங்கம் இணைந்து நடத்திய கூட்டு மே தினப் பேரணி நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.**

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமான குறித்த பேரணி நகர்ப் பகுதி ஊடாக பயணித்து யாழ்.பொது நூலகம் முன்பாக நிறைவு பெற்றது.

பேரணியில், தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!

அதிபர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர்களின் சம்பள முரண்பாட்டை உடனடியாக நீக்கு!

மலையகத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்கு!

கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கு!

விவசாயிகள் எதிர்நோக்கும் உற்பத்தி, சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கு! உள்ளிட்ட சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-33)

# தொடரும் சூட்டுச் சம்பவங்கள்
## தடுக்க பொலிஸார் தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பாதாள உலக வன்முறைகள் அதிகரித்துள்ளதாகவும், இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 38 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 27 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

பெரும்பாலான சம்பவங்கள் மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களிலிருந்து பதிவாகியுள்ளன.

அவை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களால் பெருகிய மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகள் எனவும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும், போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புகளுக்கு இடையே அதிகரித்து வரும் மோதல்கள் மற்றும் போட்டி காரணமாகவே வன்முறை ஏற்படுவதாக சட்ட அமுலாக்க அதிகாரிகள் கூறுகின்றனர். இந்தக் குற்றச் செயல் வலையமைப்புகளை அகற்றவும் மேலும் இரத்தக்களரிகளைத் தடுக்கவும் பொலிஸ் தரப்பு முயற்சிகளை தற்போது மேற்கொண்டுள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் வளர்ந்து வரும் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு வலுவான சமூக ஒத்துழைப்பு மற்றும் சட்டமன்ற ஆதரவையும் அதிகாரிகள் கோரியுள்ளனர்.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன எனவும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. (நி-8)

# பேருந்துக் கட்டணத்தில் மாற்றம் இல்லை

(கொழும்பு)

டீசல் விலையானது குறைக்கப்பட்ட போதிலும் பேருந்துக் கட்டணத்தை மாற்றியமைக்கப் போவதில்லை என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

இந்த நேரத்தில் பேருந்துக் கட்டணத்தைக் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

விலைச் சூத்திரம் 20 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது என்பதைப் பொது மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அதற்கு மாறாக நாங்கள் செயற்படவில்லை.

எனவே, இந்த நேரத்தில் பேருந்துக் கட்டணத்தைக் குறைப்போம் என்று யாரும் எதிர்பார்க்கக் கூடாது.

எரிபொருள் விலை மட்டும் பேருந்துக் கட்டணங்களைப் பாதிக்கும் ஒரே காரணியல்ல என்று குறிப்பிட்ட அவர், ஏனைய அனைத்து செலவுகளும் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (நி-8)

# முன்னாள் ஜனாதிபதி ரணிலின்
# தலைமைப் பாதுகாப்பு அதிகாரிக்கு உடனடி இடமாற்றம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

அதற்கமைய, தலைமைப் பாதுகாப்பு அதிகாரி அசோக, காங்கேசன்துறைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவர் 15 ஆண்டுகள் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாகப் பணியாற்றினார். (நி-8)


# மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி. சிவமலர் நாகலிங்கம் [உப அதிபர்]

(B.A (Eco.special),Dip In Education, SLTS-I)

சேவை விபரம்

Best Wishes

- யா/ பண்டிதர் குடியிருப்பு புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயம் – (11.01.1993-09.06.1996)
- யா/ எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை – (10.06.1996-24.02.1997)
- கிளி/ பளை மத்திய கல்லூரி – (25.02.1997-02.11.2009)
- யா/ ஞானசாரியார் கல்லூரி – (03.11.2009-12.02.2013)
- யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை – (13.02.2013-02.05.2025)

ஆசிரியப் பணியில் 32 வருடங்களில் எமது பாடசாலையில் 12 வருடங்களாக ஆசிரியராக, உப அதிபராக சேவையாற்றி ஓய்வு பெறும் திருமதி. **சிவமலர் நாகலிங்கம்** ஆசிரியைக்கு இனிய மணி விழா வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வு காலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடன் மனமகிழ்ச்சியோடும் என்றும் இன்பமாய் வாழ வாழ்த்துவதுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை அடிச்ச சூப்பர் 'சிக்ஸர்' ராஜ்யம் இழந்தது ராஜஸ்தான்





இந்தியன் பிரீமியர் போட்டியில் தொடர்ச்சியாக ஆறாவது (சிக்சர்) வெற்றி பெற்றது மும்பை அணி. 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்த ராஜஸ்தான் "பிளே ஓப்" வாய்ப்பை இழந்து வெளியேறியது.

ஜெய்ப்பூர், சவாய் மான்சிங் மைதானத்தில் நேற்று நடந்த பிரிமியர் லீக் போட்டியில் ஐந்து முறை சம்பியன் ஆன மும்பை அணி, ராஜஸ்தானை எதிர்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணியின் தலைவர் ரியான் பராக், களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**ரிக்கிள்டன் அபாரம்**

மும்பை அணிக்கு ரோகித் சர்மா, ரிக்கிள்டன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ஆர்ச்சர் வீசிய ஐந்தாவது ஓவரின் கடைசி இரு பந்தில் சிக்சர், பவுண்டரி என விளாசினார் ரிக்கிள்டன். மறுபக்கம் தீக்சன ஓவரில் தன் பங்கிற்கு அடுத்தடுத்து இரு பவுண்டரிகள் அடித்தார் ரோகித். கார்த்திகேயா வீசிய 9 வது ஓவரின் முதல் இரு பந்தில் ரோகித், பவுண்டரி அடிக்க, கடைசி பந்தை சிக்சருக்கு அனுப்பினார் ரிக்கிள்டன். இவர் 29 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

**ரோகித் அரைச்சதம்**

மும்பை அணியின் ஓட்ட எண்ணிக்கை 10.1 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது. மீண்டும் தீக்சன பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரோகித், 31 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். கடந்த 4 இன்னிங்சில் இவர் அடித்த 3ஆவது அரைச்சதம் இது.

முதல் விக்கெட்டுக்காக 116 ஓட்டங்கள் சேர்த்த போது, தீக்சன சுழலில் சிக்கினார் ரிக்கிள்டன் (61). அடுத்த சில நிமிடத்தில் ரியான் பராக் பந்தில் சிக்சர் அடிக்க ஆசைப்பட்ட ரோகித், 53 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து சூர்யகுமார், அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா ஜோடி சேர்ந்தனர். பரூக்கி வீசிய 14வது ஓவரில் பாண்ட்யா 1, சூர்ய குமார் 2 பவுண்டரிகள் அடிக்க, 16 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. தொடர்ந்து தீக்சனா, ஆர்ச்சர் பந்துகளில் சிக்சர் அடித்து மிரட்டினார் சூர்யகுமார். பரூக்கி வீசிய 18 வது ஓவரில் பாண்ட்யா, 3 பவுண்டரிகள், ஒரு சிக்சர் என விளாச, மொத்தம் 21 ஓட்டங்கள் கிடைத்தன.

கடைசி இரண்டு ஓவரை ஆர்ச்சர், ஆகாஷ் மத்வல் சிறப்பாக வீச, 8, 13 என 21 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டன.

20 ஓவர்கள் நிறைவில் மும்பை அணி 2 விக்கெட்டுகளை இழந்து 217 ஓட்டங்களைக் குவித்தது. கடைசி 46 பந்துகளில் 94 ஓட்டங்கள் சேர்த்த சூர்யகுமார் (23 பந்தில் 48, ஸ்டிரைக் ரேட் 208.69), பாண்ட்யா (23 பந்தில் 48, ஸ்டிரைக் ரேட் 208.69) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**சரிந்த விக்கெட்**


ராஜஸ்தான் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. இளம் வீரர் வைபவ் "டக்" அவுட்டானார். ஜெய்ஸ்வால் (13), நிதிஷ் ராணா (9), ரியான் பராக் (16), ஹெட்மயர் (0), ஷூபம் துபே (15) என யாரும் நிலைக்கவில்லை.

துருவ் ஜுரல் (11) கரண் சர்மா சுழலில் சிக்கினார். தொடர்ந்து அசத்திய கரண் சர்மா, தீக்சனா (2), கார்த்திகேயாவை (2) திருப்பி அனுப்பினார். கடைசியில் ஆர்ச்சர் (30) ஆட்டமிழக்க, 16.1 ஓவர்களில் 117 ஓட்டங்களில் சுருண்டு தோற்ற ராஜஸ்தான் அணி, "பிளே ஓப்" வாய்ப்பை இழந்தது.

**ஆறாவது வெற்றி**

மும்பை அணி முதல் 5 போட்டிகளில் 1ல் மட்டும் வென்றது. அடுத்த 6 போட்டிகளிலும் தொடர்ச்சியாக வென்றது. கடந்த 2008, 2017 வரிசையில், மூன்றாவது முறையாக இதுபோல தொடர் வெற்றியை பதிவு செய்தது. தவிர, 2010, 2013, 2015, 2020இல் தொடர்ந்து 5 வெற்றிகளைப் பெற்றிருந்தது. (ம-4,7)

## ஷ்ரேயாஸ் ஐயருக்கு ரூ.12 லட்சம் அபராதம்



சி.எஸ்.கேவுக்கு எதிரான போட்டியில் மெதுவாகப் பந்துவீசியதால் ரூ.12 இலட்சம் அபராதம் பஞ்சாப் கப்டன் ஷ்ரேயாஸ் ஐயருக்கு விதிக்கப்பட்டதாக ஐ.பி.எல் நிர்வாகம் அறிவித்துள்ளது.

சேப்பாக்கில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போட்டியில் 19.4 ஆவது ஓவரில் பஞ்சாப் அணி திரில் வெற்றி பெற்றது.

முதலில் பட் செய்த சி.எஸ்.கே 190 இற்கு ஆல் அவுட்டானது. அடுத்து விளையாடிய பஞ்சாப் அணியில் கப்டன் ஷ்ரேயாஸ் ஐயர் 41 பந்துகளில் 72 ரன்கள் குவித்தார்.

இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடியதாலும் சஹாலை 19 ஆவது ஓவரில் கொடுத்ததும் திருப்புமுனையாக அமைந்தது. இதனால், இறுதியில் ஷ்ரேயாஸ் ஐயருக்கு ஆட்ட நாயகன் விருது கிடைத்தது.

பஞ்சாப் அணிக்கு இது முதல் முறை என்பதால் ஐ.பி.எல் விதி 2.22 இன் படி ரூ.12 லட்சம் மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது.

கடந்தமுறை கே.கே.ஆர் அணிக்கு கிண்ணத்தை வென்று கொடுத்த ஷ்ரேயாஸ் ஐயர் தற்போது பஞ்சாப் அணிக்கும் கிண்ணத்தை வென்று தருவார் என்ற நம்பிக்கையை ரசிகர்களிடம் விதைத்துள்ளார். அதே வேளை புள்ளிப் பட்டியலில் பஞ்சாப் அணி 2 ஆவது இடத்தில் இருக்கிறது. (6-8)

## தமிழ் மக்களை...

புதிய அரசாங்கம் அமைந்ததன் பின்னர் தேசிய மக்கள் சக்தி நேற்று காலி முகத்திடலில் நடத்திய முதலாவது மே தினக் கூட்டத்தில் பங்கேற்ற போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், வடக்குக் கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகளை எமது அரசாங்கம் கட்டாயம் உறுதிப்படுத்தும்.

நாட்டில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக எம்மை விட நாட்டு மக்கள் முன்னோக்கி நகர்கின்றார்கள்.

அது கடந்த பொதுத் தேர்தலில் நன்கு தெளிவுபடுத்தப்பட்டது வடக்கு மக்கள் மற்றும் கிழக்கு மக்கள் தேசிய மக்கள் சக்தி மீது அதிக நம்பிக்கை வைத்தனர். அவர்கள் எம்மை விட முன்னோக்கி ஒரு அடி எடுத்து வைத்தார்கள். அந்தப் பகுதி மக்கள் வடக்கின் பாரம்பரிய அரசியல் கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

பாரம்பரிய அரசியல் தலைவர்களை அவர்கள் தெரிவு செய்யவில்லை. அவர்கள் அனைவரையும் நிராகரித்துவிட்டு எம் மீது அந்த மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள். அதன் மூலம் என்ன புலப்படுகின்றது? தேசிய ஐக்கியம் தேவை என அந்த மக்கள் கூறுகின்றார்கள். நாம் அந்த மக்களை ஒருபோதும் கைவிடப் போவதில்லை.

அவர்களுடைய கலாசார உரிமைகள், அவர்களுடைய மொழி சார்ந்த உரிமைகள், அவர்களுடைய பாரம்பரியக் காணிகள் தொடர்பிலான உரிமைகள், சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமைகள் மற்றும் இந்த நாட்டின் பிரஜைகளாக அவர்கள் வாழ்வதற்கு இருக்கின்ற அனைத்து அடிப்படை உரிமைகளையும் நாம் உறுதிப்படுத்துவோம்.


அதுவே எமது நாட்டைக் கட்டி எழுப்பும் இரண்டாவது தூண். அது இல்லாமல் எமது நாட்டைக் கட்டி எழுப்புவது தொடர்பில் எம்மால் சிந்தித்து கூடப் பார்க்க முடியாது. மக்களைப் பிளவுபடுத்தும் அரசியலே அன்று காணப்பட்டது. எனினும் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்களை ஒன்றிணைக்கும் அரசியல் இயக்கம் வெற்றி பெற்றுள்ளது.

வடக்கு மக்கள், கிழக்கு மக்கள், தெற்கு மக்கள் ஒரே கருத்தில் ஒரே இயக்கத்தில் இன்று ஒன்றிணைந்துள்ளார்கள். அது மிகவும் தேவையான ஒரு அடித்தளமாகும். அந்த அடித்தளத்தை நாம் தற்போது உருவாக்கியுள்ளோம் என்றார். (ம-4,7)

## நல்லை ஆதீன...

நல்லை ஆதீனத்துக்கு எடுத்து வரப்பட்டு அவரின் அந்திமக் கிரியைகள் இன்று மாலை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று சுவாமிகளின் திருவுடல் நல்லூர் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். (ம-7,4)


## இன்றைய ஆட்டங்கள்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரேமதாசவின் நினைவுநாள் நேற்று அனுஷ்டிப்பு

(கொழும்பு)

32 ஆண்டுகளுக்கு முன்பு மே தின ஊர்வலத்தின்போது குண்டு வெடிப்பில் படுகொலை செய்யப்பட்ட மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவை கௌரவிக்கும் வகையில் நினைவு நாள் நிகழ்வு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் முதல் பெண்மணி ஹேமா பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கடந்த 1993 மே முதலாம் திகதியன்று ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தின் போது நடந்த தற்கொலைக் குண்டுவெடிப்பில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவுடன் 22 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## கேள்வி மனுக்கோரல்

**தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வரையறுக்கப்பட்டது)**
**சங்கக் கட்டடங்களை வாடகைக்கு வழங்குதல்**

எமது சங்கத்திற்குச் சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் கட்டடங்கள் வாடகைக்கு வழங்கப்படவுள்ளன. ஆர்வமுடையோர் கேள்வி மனுவினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

| தொ.இல | கட்டட விபரம் | அளவு |
|---|---|---|
| 01) | தெல்லிப்பழைச் சந்திக்கு அருகாமையிலுள்ள திரையரங்கக் கட்டடம் (முன்னைய துர்க்கா சினிமா) | 100' X 30' -3000 சதுரஅடி |
| 02) | அலுவலக மேல்மாடிக் கட்டடம் (2 ஆவது தளம்) | 55' X 50'-2750 சதுரஅடி |
| 03) | சங்க தலைமைக் காரியாலய மேற்கூரை சூரிய மின்கல இணைப்புப் பெற்றுக்கொள்வதற்கு | 2750 சதுரஅடி |
| 04) | தெல்லிப்பழைச் சந்திக்கு அருகாமையில் ஏற்கனவே இலங்கை வங்கி தெல்லிப்பழை இயங்கிய கட்டடம் | 1113 சதுர அடி |
| 05) | தெல்லிப்பழைச் சந்திக்கு அருகாமையில் சங்கத் தலைமைக் காரியாலயத்திற்குக் கீழுள்ள கட்டடம் | 31' × 10' = 310 சதுரஅடி |
| 06) | சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு கீழுள்ள கட்டடம் | 42' ×10' = 420 சதுரஅடி |

01) மேற்குறிப்பிட்ட கட்டடத்தை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை வாய்ந்தவர்கள் கேள்வி மனுவை முன்வைக்க முடியும். ஆர்வமுள்ளவர்கள் காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பழையில் அமைந்துள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கட்டடத்தை பார்வையிட விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.4.30 மணி வரை பார்வையிட முடியும்.


02) ஆர்வமுள்ள கேள்வி மனுதாரர்கள் அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை மீளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500.00 இனை காசாக செலுத்தி பொதுமுகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவத்தை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து), காங்கேசந்துறை வீதி, தெல்லிப்பழை எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

03) விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 16.05.2025 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கக்கூடியவாறு "தலைவர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து), தெல்லிப்பழை" எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
தெல்லிப்பழை.

தெல்லிப்பழை
2025.05.02 (c-2855)

# அமெரிக்க வரி விவகாரம்;
## அரசுடன் இணைந்து செயற்பட தயார்
## ஐ.தே.கவும் அறிவிப்பு



(கொழும்பு)

அமெரிக்கா விதித்த பரஸ்பர வரி நெருக்கடியைத் தீர்க்க இலங்கை அதிகாரிகள் எடுக்கும் எந்தவொரு நேர்மறையான நடவடிக்கைகளையும் ஆதரிக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசியக் கட்சியும் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன நேற்று தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பின் போது இந்தக் கருத்தை முன்வைத்தவிஜேவர்தன, பரஸ்பர வரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்த ஒரு நேர்மறையான நடவடிக்கைகளையும் இதுவரை அரசாங்கம் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஏற்றுமதிகள் மீது அமெரிக்கா விதித்த 44 வீத பரஸ்பர வரியினால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் வேலைகள் ஆபத்தில் உள்ளன என்றும் சுட்டிக்காட்டினார். (நி-8)

## பெயர் மாற்ற அறிவித்தல்

இல 85/4, சாபிநகர், அரானி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியையுடைய பெனடிற் செல்வகுமாரி ஆகிய நான் எனது பெயரினை பெனடிற் செல்வகுமாரி வேஜினியா எனப் பெயர் மாற்றம் செய்கிறேன்; எனவே இன்று முதல் மேற்குறித்த பெயரையே எனது சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயகக் குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
பெனடிற் செல்வகுமாரி வேஜினியா.

(c-2865)

# இராசிபலன்

02.05.2025
சித்திரை 19, வெள்ளிக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 3.17மணிவரை
திருவாதிரை முன்னிரவு 6.45 மணிவரை

சுபநேரம் 5.57-7.27மணிவரை
இராகுகாலம் 10.27-11.57மணிவரை

சந்திராஷ்டமம் -
அனுசம், கேட்டை

வளவன்

**மேஷம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** நிதிநிலை உயரும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும், நிம்மதிக்காக ஆலயம் நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**கடகம்** வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பொன்னான நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன் வரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**துலாம்** தொழில் வளர்ச்சிக்கு குறிக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்கள் இடம் பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், விரயங்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கும்பம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்துகள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிறர் உதவியுண்டு.

**மீனம்** தொழில் ரீதியாக வர வேண்டிய வரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், வாகன சுகமுண்டு, உடல் நலன் சீராகும்.

உழைப்பவர் கையில்தான் உலகம் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகை ⟷ கே. கே. எஸ் பயணக்கட்டணம் குறைப்பு

## சிவகங்கை கப்பல் குழுமத் தலைவர்

(சென்னை)

**இந்தியாவின் நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு இயக்கப்படும் பயணிகள் கப்பலில் கட்டணம் 8 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளதாக சிவ கங்கை கப்பல் குழுமத் தலைவர் சுந்தர்ராஜன் தெரி வித்துள்ளார்.**



இந்தியாவின் நாகபட்டி னத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு சுபம் நிறுவனத்தின் சார்பில் சிவகங்கை பயணிகள் கப்பல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. வாரத்தில் செவ் வாய்க்கிழமை தவிர்த்து ஆறு நாட்கள் இயக்கப்பட்டு வரும் கப்பல் சேவையில் இருநாட்டுப் பயணிகளும் பயன்பெற்று வருகின்றனர்.

இந் நிலையில் சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் தலை வர் சுந்தர்ராஜன் நாக பட்டினத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கும் போதே இவ்வாறு தெரி வித்தார்.

நாகபட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறை க்கு கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் சிவகங்கை கப்பல் சேவை இயக்கப்பட்டு வருவ தாகவும், இதில் கோடை விடு முறையை முன்னிட்டு பயணி களைக் கவரும் விதமாக 8,500 ரூபாயாக உள்ள கட்டணம் 8000 ரூபாயாக குறைக்கப்படுவதாக தெரி வித்தார்.

மேலும் தற்பொழுது 10 கிலோ வரை அனுமதிக்கப் படும் இலவச லக்கேஜ் இனி 22 கிலோ வரை அனுமதிக்கப் படும் எனவும் ஜூன் முதல் வாரத்தில் 250 பேர் பயணிக்க கூடிய கப்பல் இயக்கப்பட உள்ளதாகவும், கார்கோ கப்பல் இயக்குவதற்கான நடவடிக்கை யும் எடுக்கப்பட்டு வருவதாக கப்பல் நிறுவனத் தலைவர் சுந்தர்ராஜன் தெரிவித்தார்.

அதே வேளை சரக்குக் கப்பல் போக்குவரத்தை ஆரம் பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தற்போது அதற் கான ஒப்புதல் பெறும் பணி நடைபெற்று வருவதாகவும் எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதியளவில் சரக்குக் கப்பல் போக்குவரத்தை நாகபட்டி னத்திலிருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்திற்கு ஆரம்பிக்க வாய்ப்புகள் உள்ள தாகவும் இதன் போது தெரி வித்தார். (6-8-33-285)

# தென்னிந்திய சினிமாவில் கால்பதிக்கும் ஈழத்தவர்கள்



(சென்னை)

வினோத் ராஜேந்திரன் இயக்கத்தில் உருவாகும் 'மைனர்' படத்தின் மூலம் தென்னிந்திய சினிமாவில் ஈழத்தைச் சேர்ந்தவர்களான ராப் பாடகர் வாகீஷன் நாயக னாகவும் பிக்பாஸ் புகழ் ஜனனி நாயகியாகவும் இணைந்து நடிக்கவுள்ளனர்.

ஃபைண்டர் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, இயக்குநர் வினோத் ராஜேந் திரன் இயக்கத்தில் உரு வாகும் ரோம்காம் திரைப் படம் "மைனர்". இப் படத் தின் பூஜை நேற்று முன் தினம் புதன்கிழமை இடம் பெற்றது.

Arabi production & Viyan ventures மற்றும் May Day Productions சார்பில் இணைந்து தயாரிக் கும் இந்தப் படம், இன்றைய இளைய தலைமுறையின் காதல் எப்படி இருக்கிறது என்பது தான் இப்படத்தின் மையம்.

பள்ளிப் பருவத்தில் பிரிந்த காதலைத் தேடி ஒரு இளைஞன் பயணமா கிறான். அந்தக் காதல் மீண்டும் சேர்ந்ததா? இரு வரும் இணைந் தார்களா என்பது தான் இப்படத்தின் கதை.

இப்படத்தில் இலங்கை ராப் பாடகர் வாகீசன் நாயகனாக நடிக்க, பிக்பாஸ் புகழ் ஜனனி நாயகியாக நடிக்கிறார். சார்லி, செண்ட் ராயன், ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக் கின்றனர். இப்படத்தின் ஆரம்ப கட்ட பணிகள் தற் போது விறு விறுப்பாக நடந்து வருகிறது.

வினோத் ராஜேந்திரன் எழுதி இயக்கும் இந்தத் திரைப் படத்திற்கு ஒளிப் பதிவினை யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த றெஜி செல்வ ராசா மேற் கொள்ள, ஆர். சூர்யபிரசாத் இசையமைக் கவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (6-8-33)

# பஹல்காம் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு

## யாழில் உணர்வுபூர்வமான அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத்துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் பஹல்காம் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக் களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திருவள் ளுவர் கலாசார மண்ட பத்தில் நடைபெற்றது.

இந்தியாவின் ஜம்மு - காஷ்மீர் பஹல்காம் பகுதியில் அண்மையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 26 பொது மக்கள் கொல்லப்பட்டி ருந்தனர். இந் நிலையில் இவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங் கோவன், மதத் தலை வர்கள் உள்ளிட்ட பல தரப் பினரும் பங்கேற்ற னர். (6-8)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

இவ் மஹோற்சவ தினங் களில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவ திருவிழாவும் 12 ஆம் திகதி திங்கட் கிழமை தீர்த்தோற்சவ திருவிழாவும் இடம்பெற வுள்ளது. (3-8-33)

## கணனிமயப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவபரிபாலன சபையின் நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொடர்புகள் கணனி மயமாக்கப்படு கின்றது. சபையுடன் தொடர்பில் இல்லாத ஆயுள் அங்கத்தவர்கள் வட்ஸ் அப்- 077 789 5716 எனும் இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளவும் என யாழ். சைவ பரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (6-8)

# அட்சய திருதியைநாளில் அலைமோதிய மக்கள்



(யாழ்ப்பாணம்)

அட்சயத் திருதியை நாளான நேற்று முன் தினம் யாழிலுள்ள நகைக் கடைகளில் மக்கள் கூட்டம் அலை மோதியது.

அட்சயத் திருதியை நன் நாளில் தங்கம் வாங் கினால் வீட்டில் செல்வச் செழிப்பு அதிகரிக்கும் என் பது மக்களிடையே நிலவும் ஐதீகமாகும்.

இந் நிலையில் யாழில் உள்ள நகைக் கடைகளில் அதிகமான மக்கள் நகை களை வாங்க முண் டியடித்தமை குறிப்பிடத் தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபை தேர்தல் ஏற்பாடுகள் யாழில் பூர்த்தி



## யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக யாழ்.மாவட்டத்தில் அனைத்து ஏற்பாடு களும் பூர்த்தியாகியுள்ள நிலையில் அவற்றுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ள துறைசார் அதிகாரிகள் தயாராக இருப்பதாக யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும்தெரிவிக்கையில்.

யாழ்.மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகள் இருக்கின்றன.

குறித்த சபைகளில் உள்ள 243 வட்டாரங்களில் இருந்து உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களிலிருந்து போட்டியிடுகின்றனர்.

மாவட்டத்தில் மக்கள் தமது வாக்குகளை அளிப்பதற்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் 4 இலட்சத்து 98 ஆயிரத்து 140 வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் தேர்தல் கடமைகளுக்காக 6 ஆயிரத்து 320 அதிகாரிகளும் 1048 பொலிஸ் உத்தியோகத்தர்களும்கடமையாற்றவுள்ளனர்.

மே மாதம் 5 ஆம் திகதி காலை 8 மணியில் இருந்து யாழ்.மத்திய கல்லூரியில் இருந்து வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுகள் உள்ளிட்ட ஆவணங்கள் பேருந்துகள் மூலமாக குறித்த வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் யாழ்.மாவட்டத்தில் 243 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. இலங்கை போக்குவரத்து சபைக்கான 50 பேருந்துகளும், தனியார் பேருந்து 143 பேருந்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று தீவக போக்குவரத்து தொடர்பாக குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கு கடற்படை தளபதியிடம் கலந்துரையாடி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இதுவரை காலமும் யாழ்.மாவட்டத்திலே 94 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக 4 வன்முறை சம்பவங்களும், 90 சட்ட விரோத மீறலும் இடம்பெற்றுள்ளதுடன் அவை தொடர்பில் தேர்தல் முறைப்பாட்டு அலுவலகத்தில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் அவை தொடர்பில் மாவட்ட தேர்தல் அலுவகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (6-8-33)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மயிலப்புலம் சரவணை, வேலணை-05 அருள்மிகு திருப்பொலி கட்டுவன்வான் ஐயனார் திருக்கோவில் புனராவர்த்தன நவ குண்டபக்ஷ பிரதிஷ்ட மகா கும்பாபிஷேக திருக்குட திருமஞ்சன பெருஞ்சாந்திப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.33 மணிமுதல் 8.27 மணிவரை உள்ள சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)

## 'சிலோன் சிங்கர்' இறுதிப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். இசைக் கலையகம் நடத்தும் மாபெரும் "சிலோன் சிங்கர்" பாடல் போட்டி-2025 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு குருநகர் சனசமூக நிலைய கலையரங்கில் யாழ்.இசைக் கலையகத் தலைவர் சிறில் ரவிசங்கர் தலைமையில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க-8)

# வர்த்தக நிலையமொன்றில் பழுதடைந்த முட்டைகள் மீட்பு

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள முட்டை விற்பனை நிலையத்தில் பாடசாலை உட்பட பலருக்கு பழுதடைந்த முட்டைகளை விற் பனை செய்ததாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து சுகா தாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கையை நேற்று முன்தினம்மாலை மேற்கொண்டனர்.

இதன்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பல ஆயிரத்திற்கும் மேற்பட்ட முட்டைகளும் மீட்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டன.

குறித்த பகுதியில் இயங்கி வரும் முட்டை விற்பனை நிலையத்தில் இருந்து பாடசாலை மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட முட்டைகள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதாக வவுனியா பொதுச் சுகாதர பரிசோதகர்களுக்கு கிடைத்த 3 முறைப்பாடுகளையடுத்து குறித்த வர்த்தக நிலையம் மீது சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது பாவனைக்கு உதவாத முறையில் முட்டை விற்பனை செய்த தாகக் குறித்த வர்த்தக நிலையத்திற்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டதுடன், அதிகளவிலான முட்டைகளும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டன. (6-8-250)

# மாட்டு இறைச்சியுடன் விசுவமடுவில் ஒருவர் கைது


(தருமபுரம்)

விசுவமடுவில் 50 கிலோ விற்கும் அதிகமான மாட்டு இறைச்சியுடன் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக விசுவமடு மாமிச வாணிபம் ஒன்றில் விற்பனை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட 50 கிலோவுக்கும் அதிகமான மாட்டு இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாட்டு இறைச்சி மக்கள் பாவனைக்கு உகந்தது அல்ல மற்றும் சுகாதாரப் பரிசோதகரின் சிபாரிசு மற்றும் கால்நடை வைத்தியரின் சிபாரிசு என்பவை இல்லாத காரணத்தினால் சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பு திகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (6-8-[illegible])

# பராமரிப்பின்றி சாலையில் நிறுத்தப்பட்டுள்ள பேருந்துகள்



(மன்னார்)

மன்னார் மற்றும் முல்லைத்தீவு பொதுப்போக்குவரத்து சாலைகளின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதுடன் பல கோடி பெறுமதியான அரச சொத்துக்கள் விரயம் செய்யப்பட்டுள்ளதாகவும் இந் நிலைக்கான காரணம் தொடர்பில் விரைவில் விசாரணைகள் முன்னெடுக்கவுள்ளதாக பொதுப் போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் இலங்கை பொதுப் போக்குவரத்து சாலையின் அவல நிலை தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை பொதுப் போக்குவரத்து சபையின் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் நேற்று முன்தினம் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதன் போது கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்

இதன் போது தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் போக்குவரத்து சாலையில் பல கோடி ரூபா பெறுமதியான பேருந்துகள் [illegible] போக்குவரத்து சாலையில் நிறுத்தப்பட்டு கவனிப்பின்றிய நிலையில் காணப்பட்டது. குறித்த வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் பல வருடங்களாகக் கொள்வனவு செய்யப்படாமையினால் இந்த நிலை என மன்னார் போக்குவரத்து சாலையினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது

அதே நேரம் மன்னார் மாவட்டத்தில் இருந்து பல தூரப் பகுதிகளுக்கான சேவை நீண்டகாலங்களாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போதும் கொழும்பு, கண்டிபோன்ற பகுதிகளுக்கு மிகவும் பழுதடைந்த பேருந்துகளையே மன்னார் போக்குவரத்துசாலை பயன்படுத்தி வருகின்றது

இவ்வாறான நிலையில் குறித்த விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் கண்காணிப்பு விஜயத்தின் பின் கருத்து தெரிவிக்கையில்,


மன்னார் பொது போக்குவரத்து சாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும் விரைவில் அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அதே நேரம் பழுதடைந்துள்ள பேருந்துகளை மீள்பயன்பாட்டுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளவுள்ளதுடன் ஐந்து திருத்தப்பட்ட இஞ்சின்கள் விரைவில் மன்னார் போக்குவரத்து சாலைக்கு கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (6-9-285)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாரதம்

# இந்தியா - பாகிஸ்தான் போர்ப்பதற் அமைதி பேணுமாறு ஐ.நா வலியுறு

## பதற்றங்களைத் தணிக்குமாறு அமெரிக்காவும் வலியுறுத்து



(ஜெனீவா)

**“இந்தியாவும் பாகிஸ்தானும் அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும்” என ஐ.நாவும் அமெரிக்காவும் வலியுறுத்தி உள்ளன.**

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 26 அப்பாவிச் சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டனர். இது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பதற்றங்களை அதிகரிக்க வழிவகுத்தது.

அதன் பின்னர், இரு நாடுகளும் வர்த்தகத்தையும், சிந்து நதி நீர் ஒப்பந்தம் மற்றும் சிம்லா ஒப்பந்தம் போன்ற பல ஒப்பந்தங்களையும் நிறுத்தி வைத்துள்ளன.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகள் குறித்து கவலை தெரிவித்த அன்டோனியோ குட்டெரெஸ், “எந்தவொரு மோதலும் பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடும்” என்று எச்சரித்தார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரிடம் பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலைக் கண்டித்த, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, “இந்தியாவும், பாகிஸ்தானும் பதற்றங்களைத் தணிக்க வேண்டும். அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும்” என வலியுறுத்தியுள்ளார்.

பஹல்காமில் நடந்த

## பத்மபூஷண் விருது பெற்ற அஜித் குதூகலத்தில் ரசிகர்கள்



(டில்லி)

குடியரசு தினத்தையொட்டி ஆண்டுதோறும் பத்ம விருதுகள் அறிவிக்கப்படுகின்றன. கலை, பொதுச்சேவை உள்ளிட்ட துறைகளில் சாதனை புரிந்தவர்களை கௌரவிக்க மத்திய அரசு இந்த விருதுகளை வழாங்குகிறது.

இந்த ஆண்டுக்கான பத்மபூஷண் விருதுகள் பட்டியலில் நடிகர் அஜித்குமார், நடிகையும் பரதநாட்டியக் கலைருமான ஷோபனா, தொழிலதிபர்-நல்லி குப்புசாமி உள்ளிட்டோர் இருந்தனர்.

டில்லியில் அண்மையில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவரிடமிருந்து நடிகர் அஜித் பத்மபூஷண் விருதைப் பெற்றார். இது தவிர கிரிக்கெட் வீரர் அஷ்வின், சமையல் கலைஞர் தாமு ஆகியோரும் இவ்விருதைப் பெற்றனர்.

## போப்பின் கல்லறையை பார்வையிடக் குவியும் மக்கள்




(வத்திக்கான்)

கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவராக இருந்த போப் பிரான்சிஸ் கடந்த 21ஆம் திகதி உடல் நலக்குறைவால் மரணமடைந்தார்.

இதனையடுத்து அவரது உடல், ரோமில் உள்ள புனித மேரி மேஜர் பசிலிக்கா பேராலயத்தில் உள்ள கல்லறை ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

ற்றம் ...த்து!



கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு மார்கோ ரூபியோ தனது வருத்தத்தைத் தெரிவித்தார். பயங்கரவாதத்திற்கு எதிராக இந்தியாவுடன் துணை நிற்க அமெரிக்காவின் உறுதிப் பாட்டை உறுதிப்படுத்தினார். விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு பாகிஸ்தானை ரூபியோ கேட்டுக் கொண்டார். (நி-8)

இந் நிலையில் போப் பிரான்சிஸ்ஸின் கல்லறையைப் பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் ரோம் மட்டுமின்றி இத்தாலி முழுவதிலும் இருந்து ஏராளமானோர் போப் பிரான்சிஸின் கல்லறையைப் பார்வையிட்டு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதேவேளை போப் பிரான்சிஸ் காலமானதைத் தொடர்ந்து அடுத்த போப் யார் என்ற எதிர்பார்ப்புடன் கிறிஸ்தவ மக்கள் காத்திருக்கின்றனர். (நி-8)



## இஸ்ரேலில் காட்டுத்தீ!

- தேசிய அவசர நிலை அறிவிப்பு
- 12 பேருக்கு காயம்
- பல கிராமங்கள் அபாயத்தில்


(ஜெருசலேம்)

ஜெருசலேம் அருகே காட்டுத்தீ பரவியதால் இஸ்ரேல் அரசு தேசிய அவசர நிலையை அறிவித்துள்ளது.

கடும் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாகத் தீ விரைவாகப் பரவியது. ஜெருசலேம் அருகே காட்டுத் தீ பற்றியதில், பல கிராமங்கள் அபாயத்தில் உள்ளன.

ஏராளமான தீயணைப்பு விமானங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பணியாளர்கள் தீயைத் தணிக்கக் களத்தில் உள்ளனர். தீ விபத்தில் சிக்கி 12 பேருக்குக் காயம் ஏற்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலில் 10 ஆண்டுகளில் மிக மோசமான தீ விபத்தாக இந்தச் சம்பவம் அறியப்பட்டுள்ளது. வீடுகள் மற்றும் காடுகள் பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, மேற்கு காற்று, நகரத்திற்குள் கூடக் கூட புறநகர்ப் பகுதிகளுக்குத் தீயை எளிதில் தள்ளும். எனவே பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிரீஸ், சைப்ரஸ், குரோஷியா, இத்தாலி மற்றும் பல்கேரியா உள்ளிட்ட நாடுகளை இஸ்ரேல் உதவிக்காக அணுகியுள்ளது. (நி-8)



## பாகிஸ்தான் விமானங்கள்
### இந்திய வான்வெளியில் பறக்கத் தடை



(டில்லி)

இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு இந்திய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

பாகிஸ்தான் விமான நிறுவனங்களுக்குச் சொந்தமான விமானங்கள், இராணுவ விமானங்கள், குத்தகைக்கு விடப்பட்ட விமானங்கள் உள்ளிட்ட பாகிஸ்தானில் பதிவு செய்யப்பட்ட அனைத்து விமானங்களுக்கும் இந்திய வான்வெளியில் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை எதிர்வரும் 23ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என இந்திய மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பாகிஸ்தான் அரசாங்கமும் ஒரு வாரத்திற்கு முன்பே இந்திய விமானங்களுக்கு அந்நாட்டு வான்வெளியில் பறப்பதற்குத் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## உக்ரைனுடன் கனிம வள ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அமெரிக்கா

(வோஷிங்டன்)

பல மாதங்களாக நடைபெற்ற பதற்றமான பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் உக்ரைனும், அமெரிக்காவும் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்பால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்ட உக்ரைனிய கனிமவள ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

ரஷ்யாவுடனான போரிலிருந்து உக்ரைனின் பொருளாதார மீட்சியைத் தூண்டுவதற்காக ஒரு மறுகட்டமைப்பு முதலீட்டு நிதியை நிறுவ இரு நாடுகளும் இந்த ஒப்பந்தம் மூலமாக ஒப்புக் கொண்டுள்ளன.

உக்ரைனில் நீடித்த அமைதி மற்றும் வளர்ச்சிக்கு இரு தரப்பினரும் உறுதி பூண்டுள்ளனர் என்பதை இந்த ஒப்பந்தம் வெளிப்படுத்துவதாக அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஸ்காட் பெசெண்ட் தெரிவித்தார்.

அதேநேரம், அமெரிக்க இராணுவ உதவியைப் பெறுவதற்கு இந்த ஒப்பந்தம் அவசியமானதாகக் கருதப்படுகிறது என்று உக்ரைன் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த ஒப்பந்தம் குறித்து ரஷ்யா இன்னும் பதிலளிக்கவில்லை.

உக்ரைனில் கிராஃபைட், டைட்டானியம் மற்றும் லித்தியம் போன்ற முக்கியமான கனிமங்கள் அதிக அளவில் இருப்பதாக நம்பப்படுகிறது.

அமெரிக்காவுடனான சீனாவின் வர்த்தகப் போருக்கு மத்தியில் இந்த ஒப்பந்தம் வந்துள்ளது. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலி விசா மூலம்

# வெளிநாடு செல்ல முயன்றவர்கள் கைது

(கொழும்பு)

போலி விசாக்களைப் பயன் படுத்திப் போலந்து நாட்டுக்குச் செல்ல முயன்ற இரண்டு சந்தேக நபர்களைக் கட்டுநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் கட்டார் வழியாகப் போலந்துக்கு பயணிக்க முயன்ற இருவர் மீது மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்கள் 31 மற்றும் 38 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் தெமோதரை மற்றும் பெலிகல பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு : 1972- RC<br>நட்சத்திரம் : பரணி<br>1இல் செவ்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: O/L, Salesman<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15380 | பிறப்பு - 1995 -இந்து<br>நட்சத்திரம் : பூரம்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில் : Nursing Computer Science Diploma<br>எதிர்பார்ப்பு : வெளிநாடு<br>தொ.இ: G/14118 |
| பிறப்பு : 1999-இந்து<br>நட்சத்திரம் : பரணி<br>கி-பா-23<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்-A/L<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15381 | பிறப்பு - 1996-இந்து<br>நட்சத்திரம் : பரணி<br>கி.பா:17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு : வெளிநாடு<br>தொ.இ: G/12110 |
| பிறப்பு : 1994-இந்து<br>நட்சத்திரம் : சுவாதி<br>கி-பா-35<br>உயரம் : 5'5"<br>தகைமைதொழில்:Software Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ : B/15384 | பிறப்பு -1993 -இந்து<br>நட்சத்திரம் : அச்சுவினி<br>கி.பா-47 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமைதொழில்:.B.Com, MBA, Tutor Mentor<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/13978 |
| பிறப்பு : 1994- இந்து<br>நட்சத்திரம் : சித்திரை<br>1இல் செவ்<br>கி-பா-57<br>உயரம் : 5'8"<br>தகைமை/தொழில்: A/L, Canada<br>எதிர்பார்ப்பு:PR உள்ள பெண்<br>தொ.இ: B/15385 | பிறப்பு - 1995-இந்து<br>நட்சத்திரம் : பூரட்டாதி<br>கி.பா : - 28 3/4<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: College, Bsc, Teacher<br>எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்,வெளிநாடு<br>தொ.இ: G/13990 |
| பிறப்பு: 1997- இந்து<br>நட்சத்திரம் : மகம்<br>உயரம் : 5'8"<br>தகைமைதொழில் : NVQ,நில அளவை உதவியாளர்<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15386 | பிறப்பு - 1974-இந்து<br>நட்சத்திரம் : திருவாதிரை<br>கி.பா : 40<br>7இல் செவ்<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு : தொழில் புரியும் மணமகன்<br>தொ.இ: G/14694 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 364



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# செல்வம்

ஒரு ஊரில் ஒரு பெரிய செல்வந்தர் இருந்தார். பணத்துக்கு பஞ்சம் இல்லை. அதனாலே இந்த உலகத்தில் முடியாத காரியம் எதுவுமே இல்லை என்று நினைத்தார். பணம் இருந்தால் அந்த நினைப்புத் தானாக வந்துவிடும். அதனாலே அவரும் அப்படி நினைத்ததில் எந்தவொரு தவறும் இல்லையே! அந்த ஊருக்கு குருநானக் ஒரு தடவை வந்தார். அவருக்கு அந்தச் செல்வந்தர் மிகவும் ஆடம்பரமாக வரவேற்பு கொடுத்தார். ஊர் எல்லையிலேயே!

எங்கள் வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட்டுவிட்டு செல்ல வேண்டும் என்று கேட்டுகொண்டார். அவரும் சரி என்று ஒத்துகொண்டார். உடனே தன்னுடைய பங்களாவிலே ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார். குருநானக்கை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போனார். அமர வைத்தார். ஐயா! நான் இந்த ஊரிலேயே பெரிய வசதியானவன். என்னால் எல்லாம் முடியும். உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். எதுவாக இருந்தாலும் பரவாயில்லை!எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை! என்னால் செய்ய முடியும்! என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.

இதைக் கேட்டதும் குருநானக் சிந்தித்தார் சிறிதுநேரம்.அதன் பின் தன்னுடைய சட்டைப் பைக்குள்ளே கையை விட்டு ஒரு பழைய ஊசி ஒன்றை எடுத்தார். அந்தச் செல்வந்தரிடம் கொடுத்தார். இதோ பாருங்கள் இவ்வளவு தூரம் நீங்கள் கேட்பதனாலே சொல்கின்றேன். எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய உதவி இதுதான்! என்றார். கையிலே ஊசியை வாங்கி விட்டு இதை என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்றார் அவர்.

நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால். இந்த ஊசியைக் கவனமாக வைத்திருக்க வேண்டும். நாம் இருவரும் இறந்த பின் வேறொரு உலகத்தில் நாம் சந்திக்கக் கூடிய வாய்ப்பு இருக்கு! அப்பொழுது என்னிடம் இந்த ஊசியைக் கொண்டுவந்து கொடுங்கள். இதுதான் நீங்கள் செய்ய வேண்டிய உதவி என்றார் குருநானக் லேசாக சிரித்துக் கொண்டு.

இதைக் கேட்டவுடன் அந்தப் பெரியவர் முழிக்க ஆரம்பித்தார். அது எப்படி நான் இறக்கும்போது இந்த ஊசியை எடுத்துக்கொண்டு இன்னொரு உலகத்திற்கு வரமுடியும் என்றார். ஊசி மாதிரி ஒரு சின்னப் பொருளை கூட இந்த உலகத்தை விட்டு நாம் போகும் போது எடுத்துக்கொண்டு போக முடியாத போது உங்களுடைய செல்வத்தை எல்லாம் எப்படி அங்கே எடுத்துக் கொண்டு வரப்போகின்றீர்கள் என்று கேட்டார் குருநானக்.

அதற்குப் பின்தான் அந்தப் பெரியவர் யோசிக்க ஆரம்பித்தார். குருநானக் சொன்னார் இதோ பாருங்கள். நாம் செய்கின்ற நல்லது கெட்டதுதான் கடைசிவரைக்கும் நம்மோடு இருக்கும். அடுத்தவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பொருளைச் செலவு செய்ய வேண்டும் அப்படிச் செய்யவில்லை என்றால் எந்த பிரயோசனமும் இல்லை என்றார். அதற்குப் பிறகுதான் அந்தச் செல்வந்தரின் அறிவுக்கண் திறந்தது. உடனே குருநானக்கை வணங்கினார்.

ஐயா என்னிடம் இருந்த ஆணவம் போய்விட்டது. இனிமேல் என்னிடம் இருக்கும் செல்வத்தை நல்வழியிலேயே செலவு செய்வேன் என்றார். நம்மிடம் இருக்கும் பணம் எப்போதும் நம்மோடு வந்து கொண்டு இருக்காது என்பது இதில் இருந்து புரிகின்றது.

அதற்காக நாம் பணம் சேர்ப்பதைப் பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை. பேசவேண்டியதில்லை. பேசாமல் படுத்து தூங்கிக் கொண்டிருந்தால் போதும் என்று இதற்கு அர்த்தம் என்று நினைக்கக்கூடாது. முறையான வழியிலே பணம் சேர்க்க வேண்டும். அதை முறையான வழியிலே செலவு செய்ய வேண்டும்.அதனாலே ஏற்படக்கூடிய மனநிறைவு இருக்குமே பாருங்கள் அதை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

சொர்க்கத்திற்கு போகிறவர்கள் இங்கே இருந்து பணத்தை எடுத்துக்கொண்டு போகமுடியாது.

ஆனால் நம்முடைய செல்வத்தை இங்கே மற்றவர்களுக்கு பயன்படச் செய்து அதனால் ஏற்படும் புண்ணியம் இருக்குமே பாருங்கள்.அதை எடுத்துக்கொண்டு போகமுடியும். இதுதான் ஆன்மிகவாதிகள் சொல்வது. ஜான் நீயூட்டன் என்ற ஒருவர் சொன்னார் நான் எப்போதாவது சொர்க்கத்திற்குப் போய் சேர்ந்தேன் என்றால் அங்கே மூன்று அதிசயங்களைப் பார்ப்பேன் என்றார்.

அது என்னவென்று கேட்டார்கள்! நான் யார் யார் இருக்கமாட்டேன் என்று நினைத்துக்கொண்டிருந்தேனோ அவர்களில் சிலர் அங்கே இருப்பார்கள் அது ஒரு அதிசயம் என்று சொன்னார். சரி அடுத்தது என்ன? என்று கேட்டார்கள்.

இரண்டாவது அதிசயம் அங்கே இருப்பார்கள் என்று நான் எதிர்பார்த்த சிலர் அங்கே இருக்கமாட்டார்கள்! மூன்றாவது பெரிய அதிசயம் என்ன தெரியுமா? என்றார். என்ன என்று கேட்டார்கள்.

நான் அங்கே இருக்கிறேனே. அதுதான் அந்த மூன்றாவது அதிசயம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி அறிவுச்சோலைக்கு வெள்ளிவிழா

நாட்டின் நிலையான அபிவிருத்தியின் முதன்மைக் காரணியாகவும், வலுவூட்டும் சக்தியாகவும் விளங்கும் கல்வி முறையின் நெறியாழ்கைக்கு ஆசிரியர்களே பொறுப்பாகின்றனர். கல்வித் தொகுதியின் வெளியீடு ஆசிரியத்துவத்தினால் புலப்படுத்தப்படும். இவ்வகையில் ஆசிரியர்களுக்கு வழங்கும் தொழிற்பயிற்சி தரமானதாக இருக்க வேண்டும் என்பதற்கமைய இலங்கையில் 1986 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க கல்வியியற் கல்லூரியின் சட்டம் மூலம் கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. அந்த வகையில் யாழ்ப்பாணம் கோப்பாய் புனித மண்ணிலே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 02-05-2000 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது.

கடுமையான யுத்தகாலத்தில் பல வளப்பற்றாக் குறைகளுக்கு மத்தியில் இக் கல்லூரி உருவானது. இதற்கு தன் முயற்சியால் அர்ப்பண சேவையாற்றியவர் முதற் பீடாதிபதி கலாநிதி. தி.கமலநாதன் ஆவார். கல்லூரியின் தொடக்கம், நகர்வு, விரிவு, விளைவு என்ற வகையில் தன் தலைமைத்துவத்தைச் சிறப்பாக மனிதவளம் சார்பாகப் பிரயோகித்து வெற்றி கண்டார். இது ஆசிரிய வகிபாகத்திற்கு சாதனையை ஏற்படுத்தும் திறனாகும்.

நிதி மற்றும் பௌதீக வளங்களுடன் ஒப்பிடுகையில் மனிதவளம் மிகவும் உயர்வானது. முக்கியமானது.

- ஏனைய வளங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்க கூடிய வளம்
- புத்தாக்கங்களையும் கண்டுபிடிப்புகளையும் செய்யக் கூடிய வளம்
- தடைகள், செலவுகள் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய வளம்
- நேரத்தின் பெறுமதி தெரிந்த வளம்
- ஒழுங்குபடுத்தி வேலைகளை இலகுவாக்கும் வளம்
- வேறுபட்ட ஆளுமைகள் கற்கக் கூடிய நடத்தை மாறக்கூடிய, சாதனைகளைச் செய்யும் வளம்

இம் மனிதவளத்தை கல்வியாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவ ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், சமூகத்தை முதலாவது பீடாதிபதி கலாநிதி. தி.கமலநாதன் சிறப்பாக பயன்படுத்தினார். அதற்கு சிரேஸ்ட ஆலோசனைச் சபை உறுப்பினர், வைத்திய கலாநிதி டாக்டர்.வை.தியாகராஜா துணையாக இருந்து அர்ப்பண சேவையாற்றினார். இன்றும் ஆற்றி வருகின்றார்.

**நிலக்கொடை :**

கல்வியமைச்சு கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒரு பகுதியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பித்தது. அதன் புதிய கட்டடத்திற்கான பதினைந்து ஏக்கர் காணியை கோப்பாயில் நன்கொடையாய் தனது தந்தையார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வி.தர்மலிங்கம் அவரின் பெயரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் வழங்கினார். இந் நிலக்கொடை என்பது மிக மிக உயர்வான தியாகமும் அர்ப்பணிப்புமாகும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உலக வங்கி நிதிப்பங்களிப்பில் கல்வியமைச்சின் வழிகாட்டலில் மிகச் சிறப்பாக அன்று இயங்க பலர் உதவினார்கள். பிரதம ஆணையாளர் நிகால் கேரத், கோப்பாய் புனரமைப்பு கழகம், அன்றைய மீள் குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கட்டடம் கட்ட அருளாசி வழங்கிய அருட்கவி. வினாசித்தம்பி ஐயா, மணல் மற்றும் பௌதீக வளங்களைக் கொண்டு வருவதிலுள்ள தடைகளை நீக்கிய கல்விக்கழக கௌரவ பேபி. சுப்பிரமணியம் அவர்கள் வித்தக விநாயகர் ஆலயத்தைக் கட்டித்தந்த செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன் அவர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி அவர்கள், அன்றைய தென்னிந்தியத் திருச்சபை ஆயர் அருட்தந்தை ஜெபநேசன் அவர்கள் என இன்னும் பலர் பல உதவிகளை வழங்கினர். அவர்கள் தெய்வங்களாக இன்றும் போற்றப்படுகின்றார்கள்.




**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பயன்கள்**

1. மாணவர்களுக்கு ஆசிரிய தொழில் வாய்ப்பு பெருமளவு கிடைக்கின்றது.
2. யாழ் மாவட்ட பாடசாலைகளில் கற்பித்தல் உள்ளகப் பயிற்சியின் போது நவீன கற்பித்தல் முறைகள், செயற்றிட்டங்கள், பரிகாரக் கற்பித்தல்கள் செயல் நிலை ஆய்வுகள் சிறந்த முறையில் பிரயோகிக்கப்படுகின்றன.
3. பாடசாலையை புரிதல் செயற்றிட்டம், செயல்நிலை ஆய்வு மாநாடுகள், பாடசாலையும் சமூகமும் செயற்றிட்டம் அதிகஷ்ட பிரதேச மாணவர்களுக்கான க.பொ.த சாதாரண தர கணித, விஞ்ஞான பாடங்களுக்கான களப்பயில்வுகள், மரம் நாட்டும் செயற்றிட்டம், தொடருறுகல்வி, ஆசிரியர் மத்திய நிலையங்களுடன் இணைந்து வழங்குகின்றமை.
4. கல்வியமைச்சு, தேசிய கல்வி நிர்வாகத்துடன் இணைந்த கல்வி செயற்றிட்டங்களை நடை முறைப்படுத்துதல், புத்தாக்கங்கள், நூல்கள், சஞ்சிகைகள் உருவாக்கம்

இவ்வாறு மிகப் பெரும் கல்விசார் தாக்க விளைவை வரையறுக்கப்பட்ட வளங்களுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி சாதித்துள்ளது. இங்கு கற்றவர்கள் சிறந்த ஆசிரியர்களாக, அதிபர்களாக, கல்விப் பணிப்பாளர்களாக கல்வியலாளர்களாக சிறந்த கல்விச் சேவையாற்றி வருகின்றனர். இவ் வகையில் 2 ஆவது பீடாதிபதியாக திரு.ளு.மு யோகநாதன் அவர்கள் 2006 ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் மாணவ ஆசிரியர்களைக் கொண்டு கல்விசார், பௌதீகவள செயற்றிட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தினார். இயற்கை நேசனான இவர் பெருமளவு தென்னங்கன்றுகளை கல்லூரியில் நாட்டினார். இன்று அதன் பயன் பெருமளவு கிடைக்கின்றது. மிகவும் ஆழமாக அவதானிக்கும் திறன் இவரது ஆற்றலாகும். இது ஆசிரிய வாண்மைக்கு அவசியமானதாகும். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தர்மலிங்கம் அவர்களின் சிலை இவரது காலத்திலேயே கல்லூரியில் நிறுவப்பட்டது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர்கள் கடுமையான ஒழுக்கவிதிகளின் கீழ் பயிற்றுவிக்கப்படுவார்கள். எங்கே ஒழுக்கம், விழுமியங்கள், வகை கூறல்கள் சரியாக உள்ளதோ அங்கே கல்வி மலரும் எனும் கோட்பாட்டுடன் கல்லூரியின் மூன்றாவது பீடாதிபதி திரு.ச :அமிர்தலிங்கம் அவர்கள் 2013ஆம் ஆண்டு கல்லூரியைப் பொறுப்பேற்றார். கடுமையான நிர்வாகம் ஆனாலும் மாணவ, ஆசிரியர்கள் ,வரை விரும்புவர். தூய்மையான அன்புள்ளம் கொண்டவர். இதுவும் ஆசிரியவாண்மையில் உயர் பண்பாகும்.

**நவீன ஆசிரியத்துவ பிரதிபலிப்புக்கள், பிரச்சினைகள்**

இன்றைய மாணவர்கள் பல குடும்ப, சமூக, தொடர்பு சாதன, போதைப் பொருள், கட்டிளமைப்பருவ பிரச்சினைகளுடன் கல்வி கற்க பாடசாலை வருகின்றார்கள். அவர்களை முந்தைய ஆசிரியர்கள் கையாள்வதைப்போல கையாள முடியாது. மிகுந்த மனிதத்துவம், தந்திரோபாயம், வழிகாட்டல் ஆலோசனைத் தேர்ச்சிகள், புரிந்துணர்வு, மென் திறன்களை கற்பிப்பதற்கான சமூகத்திறன்கள், கடுமையான பயிற்சிகள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் வழங்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டு கலாநிதி. சு.பரமானந்தம் அவர்கள் நான்காவது பீடாதிபதியாக பதவியேற்கின்றார். தொடர்ந்து கொவிட் வைரஸ் காலம் கல்லூரி மருத்துவ நிலையமாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டது.

பல சவால்கள், பிரச்சினைகளுக்கு மத்தியில் பீடாதிபதி கலாநிதி. சு. பரமானந்தம் அவர்கள் தனது சமூகத்திறன்களால் சவால்களை சாதனையாக்குவார். கொவிட் காலத்தில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முன்மாதிரியான கலைத்திட்டத்தை தேசிய கல்வியியற் கல்லூரியில் சிறப்பாக நடைமுறைப்படுத்திக் காட்டினார். கல்வி அமைச்சு ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் முன்மாதிரியை பின்பற்றி இக் கலைத்திட்டத்தை நகர்த்தியமை சிறப்பான முன்மாதிரியாகும். இது ஆசிரியவாண்மைக்கு ஒரு முன்னுதாரணமாகும்.

இலங்கையிலே அதிகமான பாட நெறிகளை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி கொண்டுள்ளது. ஆரம்பக் கல்வி, விசேட கல்வி, உடற்கல்வி, விஞ்ஞானம், கணிதம், சங்கீதம், நடனம், சித்திரம் ஆகியவற்றை தமிழ் மொழி மூலமும், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவை ஆங்கில மொழி மூலமும் பயில்வுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. தமிழ், முஸ்லீம், சிங்கள மாணவ ஆசிரியர்கள் மகிழ்வாக கற்கின்றனர். இந்நிலையில் 2024 ஆம் ஆண்டு திரு.தி.ஜெயகாண்டீபன் அவர்கள் பீடாபதிபதி ஆனார். அவர் நவீன ஆசிரியர் தொழில்சார் தேர்ச்சிகளிலும், ஆசிரியத்துவ பிரதிபலித்தல், செயல் நிலை ஆய்வுத் துறைகளில் நிபுணத்துவ ஆற்றல் கொண்டு மாணவ ஆசிரியர்களைச் சிறப்பாக வழிப்படுத்தினார். சிறந்த கற்பித்தலுக்கான உறுதியான ஆளுமையும், ஆற்றலும் கொண்ட முன்மாதிரியான கற்பித்தல் கலைஞராகத் தொழிற்பட்டார். இது இன்றைய ஆசிரியர்களுக்கு அவசியமான தேர்ச்சியாகும்.

கடந்த இருபத்தைந்து வருடங்கள் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் சிறப்பாக இயங்கிய கல்லூரியின் கட்டடங்கள் கட்டி இருபத்தைந்து வருடங்கள்.பல திருத்த வேலைகள், மின்சாரம், நீர் இணைப்புக்கள் முற்றாக மறுசீரமைக்க வேண்டும், விடுதிகள் விஸ்தரிக்கப்பட வேண்டும், கலைத்திட்ட அமுலாக்கம் மேலும் இற்றைப்படுத்தப்பட வேண்டும். மனித வளவலுவூட்டல், ஒருங்கிசைவு உறுதிப்படுத்த பயிற்சிகள், மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகளுடன் மேலும் உயிர்ப்பான தொடர் பாடல்களை மேற் கொண்டு நுண்முறைக்கற்பித்தல், மாதிரிக்கற்பித்தல், களப்பயணங்கள், சர்வதேச ஆசிரிய வாண்மைப் பயில்வுகளுக்கு இணையான செயற்றிட்டங்கள் தேவையாகவுள்ளன. இதன் வளர்ச்சியாக ஒரு ஆசிரிய தொழில்துறைப் பல்கலைக் கழகமாக உரிய கட்டுப்பாடுகளுடன் கல்லூரி உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வெள்ளிவிழா ஆண்டுப் பீடாதிபதியாக திரு.ரா.லோகேஸ்வரன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். மாணவ ஆசிரியர்கள் சார்பாக நிறைந்த கரிசனையுடன் வாடிக்கையாளர் திருப்தி மூலம் மனிதவள மேம்பாட்டை ஏற்படுத்த முடியும் என்ற வகையில் பல முகாமைத்துவ தேவை திருப்தி அணுகுமுறைகளைப் பிரயோகித்து செயலாற்றுகைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றார். கல்வியமைச்சரும், பிரதமருமான கௌரவ ஹருணி அமரசிங்க கல்லூரிக்கு விஜயம் செய்ததுடன் பாராளுமன்றத்திலும் கல்லூரியில் பல தேவைகள் உண்டு அவற்றைத் தீர்த்து வைப்போம் எனவும் உரையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்ந்தும் சிறப்பான வளர்ச்சியடையும் . கடந்த இருபத்தைந்து வருடங்கள் உழைத்த அனைவருக்கும் இறையருள் கை கூடுவதாக.

**கலாநிதி.பா.தனபாலன்**
முதலாவது உபபீடாதிபதி (கல்வி),
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 760





"அப்படியானால் இந்த மண் குதிரைகளுக்கு உயிர் கொடுத்தாலும் கொடுப்பார் என்று சொல்லு! ரொம்ப நல்லதாய்ப் போயிற்று பணம் மிச்சம்!"

"உண்மையான பக்தி இருந்தால், மண் குதிரைகளும் உயிர் பெறும்! பார்க்கப் போனால் நம்முடைய உடம்புகள் மட்டும் என்ன? பிரம்மதேவன் மண்ணினால் செய்து உயிர் கொடுத்தது தானே?"

"நன்கு சொன்னாய், தம்பி! இந்த உடம்பு மண்ணினால் செய்த உடம்பு என்பதை மறந்துவிடுகிறோம். அதை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வதற்காகத் திருமண்ணைக் குழைத்து நெற்றியிலும், உடம்பிலும் இட்டுக் கொள்ளும்படி வைஷ்ணவ ஆச்சாரிய புருஷர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்!"

வந்தியத்தேவன் "உஷ்!" என்று சொல்லி, ஆழ்வார்க்கடியானுடைய கையைப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையினால் எதிரே சுட்டிக் காட்டினான். சூரியன் அஸ்தமித்துச் சிறிது நேரம் ஆகிவிட்டது. நாலாபுறமும் இருண்ட மூங்கில் தோப்புக்குள் சூழ்ந்திருந்த அச்சிறிய இடைவெளியில் மிக மங்கலாகத் தெரிந்த வெளிச்சத்தில் ஐயனாருடைய வாகனங்கள் உயிர் பெற்று அசைவதாகத் தோன்றின. ஒரு யானையும், ஒரு குதிரையும் இடம் பெயர்ந்து நகர்ந்தன. கண்ணால் கண்ட இந்த அற்புதத்தை நம்புவதா, இல்லையா என்று தெரியாமல் வந்தியத்தேவன் சிறிது நேரம் திகைத்து நின்றான். ஆனாலும் ஐயனாருடைய அற்புத சக்தியை ஆழ்வார்க்கடியானுக்கு உடனே உணர்த்திவிடக் கூடிய சந்தர்ப்பத்தை இழக்கவும் அவனுக்கு மனம் வரவில்லை. "வைஷ்ணவரே! பார்த்தீரா?" என்று அவன் சொல்வதற்குள், ஆழ்வார்க்கடியான் அவனுடைய கையை இறுக்கிப் பிடித்து, உதட்டில் விரல் வைத்துச் சமிக்ஞை காட்டி, பேச்சை நிறுத்தினான். பின்னர், இறுக்கிப் பிடித்த கையினால் வந்தியத்தேவனைப் பற்றியவாறு அவனை இழுத்துக் கொண்டு அந்த மூங்கில் புதருக்குப் பின்னால் சென்று நன்றாக மறைந்து நின்றான்.

குதிரையும் யானையும் அசைந்து சிறிது விலகிக் கொடுத்தன அல்லவா? அப்படி விலகிக் கொடுத்து இடைவெளி ஏற்பட்ட இடத்தில் ஒரு மனிதனுடைய தலை மட்டும் தெரிந்தது. அந்தத் தலை அப்பாலும் இப்பாலும் திரும்பி நாலுபுறமும் பார்த்தது. ஐயனாருடைய பலிபீடத்துக்கு பக்கத்தில் இம்மாதிரி ஒரு தலை மட்டும் தோன்றி நாலா புறமும் சுழன்று விழித்த காட்சி மிகப் பயங்கரமாயிருந்தது. எவ்வளவோ பயங்கரங்களைப் பார்த்திருந்த வந்தியத்தேவனுடைய மெய் சிலிர்த்தது. ஆனால் தன்னைப் பிடித்திருந்த ஆழ்வார்க்கடியான் கை சிறிதும் நடுக்கமுறாமலும் தளராமலும் இருந்ததை அறிந்து வந்தியத்தேவன் நெஞ்சுறுதி கொண்டான்.


இவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்தத் தலை எழும்பி மேலே வந்தது. ஒரு மனிதனுடைய மார்பு வரையில் தெரிந்தது. பிறகு அம்மனிதன் முழுமையான உருவத்துடன் கிளம்பி மேலே வந்தான். அம்மனிதன் வெளி வந்த இடத்தில் ஒரு சிறிய பிளவு, கரிய, இருள் சூழ்ந்த பாதாள பிலத்துவாரத்தைப் போல, பயங்கரமாக வாயைத் திறந்து கொண்டிருந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வெள்ளை யானை பறக்கிறது



மதுராந்தகம் மன்னனுக்குக் கண் பார்வை மங்கிக் கொண்டே போனது. வெள்ளை யானையின் தந்தங்களைத் தேய்த்து, கண்களில் பூசிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் மறுபடி கண் பார்வை வந்துவிடும், என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

வெள்ளை யானையை உயிரோடு பிடித்து வந்தால், ஒரு ஊரையே பரிசாகத் தருவதாக அறிவித்தான், மன்னன். இந்தச் செய்தி பரமார்த்தருக்கும். அவரது சீடர்களுக்கும் எட்டியது.

குருநாதா நமக்குத் தெரிந்தவரை யானை கறுப்பு நிறமாகத்தானே இருக்கிறது? வெள்ளை யானை கூட உண்டா என்ன? எனக் கேட்டான், மட்டி. தேவலோகத்தில் ஐராவதம் என்று ஒரு யானை இந்திரனிடம் இருக்கிறது.

அது வெள்ளையாக இருக்குமாம். என்றான் மடையன். குருவே! அந்த யானையைப் பிடித்து வர உங்களுக்குத் தைரியம் இருக்கிறதா? என்று கேட்டான், முட்டாள் உடனே குருவுக்குக் கோபம் வந்து விட்டது.

கோழையே என்னால் முடியாத காரியம் கூட உண்டா? ஆனால், இந்திரனுக்கும் எனக்கும் போன ஜென்மத்தில் இருந்தே தீராத பகை. அதனால் அங்கே போவதற்கு நான் விரும்பவில்லை. என்று கூறியபடி தாடியை உருவிக் கொண்டார்.

குருதேவா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. வீட்டுக்கு வெள்ளை அடிப்பது மாதிரி யானைக்கும் வெள்ளை அடித்து விட்டால் என்ன? என்று கேட்டான், மண்டு.

ஆமாம் குருவே! யானையின் மேல் சுண்ணாம்பு தடவி விட்டால் போதும், கறுப்பு யானை வெள்ளையாக மாறிவிடும்! என்று குதித்தான், மூடன். ராஜாவுக்குத்தான் சரியாகக் கண் தெரியாதே! அதனால் அவரால் நம் மோசடியைக் கண்டுபிடிக்க முடியாது என்று மகிழ்ந்தான், முட்டாள்.

ஆகா ஆளுக்கு ஒரு ஊர் பரிசாகக் கிடைக்கப் போகிறது. இனிமேல் நாம் எல்லோரும் குட்டி ராஜாக்கள்தான்! என்றபடி மண்ணில் புரண்டார்கள்.

மட்டி பலே, பலே இப்போதுதான் உங்கள் மூளை நன்றாக வேலை செய்கிறது எனப் பாராட்டினார், பரமார்த்தர். அப்போதே தன் சீடர்களை அழைத்துக் கொண்டு, யானைப் பாகனிடம் போனார்.

ஒருநாளைக்கு மட்டும் உங்கள் யானையை வாடகைக்குக்கொடுங்கள். தேவையான பணம் தருகிறோம். நீங்களும் கூடவே வரவேண்டும். என்று வேண்டினான் மட்டி. பணத்துக்கு ஆசைப்பட்ட பாகனும் சரி என்று சம்மதித்தான். நன்றாக இருட்டிய பிறகு, பானை பானையாகச் சுண்ணாம்பு கொண்டு வந்தான், மடையன் அதை எடுத்து அபிஷேகம் செய்வது போல, யானையின் மேல் ஊற்றினான், முட்டாள்.

கொஞ்சம் சுண்ணாம்பை வாரி எடுத்து, பயந்து கொண்டே யானையின் வாயில் பூசிவிட்டான், மண்டு. பரமார்த்தரும் தம் கைத்தடியால் வரி வரியாக வெள்ளை அடித்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியா - பாகிஸ்தானில் சூழ்ந்த போர் மூட்டத்தைத் தணியுங்கள்

மூன்றாம் உலகப் போர் நடக்குமா? என விஞ்ஞான மேதை ஐன்ஸ்ரினிடம் சிலர் கேட்டனர். அதற்கு ஐன்ஸ்ரின்; மூன்றாம் உலகப் போர் நடக்குமா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் நான்காம் உலகப் போரில் கல்லுகளும் பொல்லுகளுமே போராயுதங்களாக இருக்கும் என்றார்.

அதாவது மூன்றாம் உலகப் போர் நடக்குமாயின், அதன் பேரழிவு எவ்வாறாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்டவே நான்காம் உலகப் போரில் கல்லுகளும் பொல்லுகளும் போராயுதமாக இருக்கும் என்றார்.

ஆம், மூன்றாம் உலகப் போருக்குப் பின்னர் மனித குலம் வேடுவ காலத்துக்குச் சென்றுவிடும் என்பது விஞ்ஞானி ஐன்ஸ்ரினின் கருத்தாக அமைந்துள்ளது.

எனினும் அவர் கூறிய கருத்தை எவரும் பொருட்டாக மதிப்பதில்லை.

ஆம், இப்போது உலக நாடுகளிடையே அமைதியை விட, கொதிநிலையே அதிகமாக உள்ளது.

ரஸ்யா உக்ரைனுடன் போர் தொடுத்ததன் காரணமாக உயிரிழந்த மக்கள் தொகை கொஞ்சமல்ல.

இருந்தும் இன்னமும் மனிதர்களை வேட்டையாடும் அந்தப் போர் தணியவில்லை.

இதேபோன்று இஸ்ரேல், காஸா மீது நடத்திய தாக்குதலின் கொடூரம் மிகமோசமானது.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என காஸா மக்கள் இஸ்ரேலின் தாக்குதலுக்கு இரையாகிவருகின்றனர்.

காஸா மக்கள் நாளுக்கு நாள் கொல்லப்படுவது கண்டு உலக நாடுகள் மௌனம் காப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

ஒரு நாட்டு மக்கள் மீது மிக மோசமான தாக்குதலை இன்னொரு நாடு மேற்கொள்ளும்போது, இதர நாடுகள் பேசாதிருக்கின்றனவாயின், அதுவே பொதுமை என்றாகிவிடும்.

ஆம், வலியார் அடித்தால் எளியார் அதை வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது தான் நியதி என்பதுபோல வல்லாதிக்க நாடுகள் மௌனம் காக்கின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது இந்தியா - பாகிஸ்தானுக்கிடையே போர் கனன்று கொண்டிருக்கிறது எனும் செய்தி மனிதநேயமுள்ளவர்களைப் பதைபதைக்க வைக்கிறது.

அந்தோ! இந்தியாவும் பாகிஸ்தானும் மோதிக் கொண்டால், அதன் விளைவு எத்துணை பேரழிவாக இருக்கும் என்பதை எவரும் கூறித் தெரிய வேண்டியதில்லை.

ஆக, இந்தியா - பாகிஸ்தான் நாடுகளிடையே அமைதியை - சமாதானத்தை ஏற்படுத்துவதில் உலக நாடுகளும் ஐ.நா சபையும் களத்தில் இறங்க வேண்டும்.

எப்பாடுபட்டும் இரு நாடுகளிடையேயும் சூழ்ந்துள்ள போர் மூட்டத்தைக் கலைப்பதுதான் இன்றைய உடனடித் தேவை.

### வடக்கில் காணிகளை கையகப்படுத்தும்

# வர்த்தமானியை உடன் வாபஸ் பெறாவிடின் வடக்கில் கால் வைக்க முடியாத நிலை ஏற்படும்

## ஆளும் தரப்புக்கு சுமந்திரன் எச்சரிக்கை

மக்களின் காணி மக்களிடமே என்று தேர்தலில் தாமளித்த வாக்குறுதிகளை மறந்து தேசிய மக்கள் சக்தியினர் செயற்படுகின்றனர்.

வடக்கில் காணிகளைச் சுவீகரிக்கும் நோக்குடன் அநுர அரசு வெளியிட்ட வர்த்தமானியை உடன் வாபஸ் பெற வேண்டும் எனத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தினர்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றாதீர்கள்.

குறிப்பாக தே.ம.ச வழங்கிய வாக்குறுதிகளில் மக்களின் காணிகள் மக்களிடமே வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

படையினர் வசமுள்ள மக்கள் காணியை விரைவில் விடுவிப்போம் என்றும் வாக்குறுதியழித்தனர்.

ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் தேசிய மக்கள் சக்தியினர் தாம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கையில் தற்போது இறங்கியுளளனர். இந்தச் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

காணிகளை சுவீகரிப்பதை உடனடியாக நிறுத்திக் கொள்ளுங்கள். குறிப்பாக காணி சுவீகரிக்கும் வர்த்தமானியை உடனடியாக கைவாங்க வேண்டும். இல்லாவிட்டால் ஜனாதிபதி யாழ் மண்ணிற்கு வர முடியாமல் அல்லது கால் வைக்க முடியாத நிலை ஏற்படும்.

எங்களை ஏமாளிகள் எனக் கருத வேண்டாம். ஏமாற்றுவதை நாங்கள் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை. அதற்கு எதிரான நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயம் எடுப்போம் என்றார். (ம-7)

# போர்க்குற்றங்களை மறைக்க தேர்தலை ஆயுதமாக்கும் அரசு

## சாடுகிறார் சிறீதரன் எம்.பி

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை போர்க்குற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை என நிரூபிக்க இந்த அரசு கடும் பிரயத்தனங்களை மேற்கொள்கிறது எனத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவர் சிறீதரன் தெரிவித்தார்.

பூநகரி பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர்,

வடக்கு - கிழக்கிலுள்ள உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதன் ஊடாக தமிழ் மக்கள் தங்களை அங்கீகரித்திருக்கிறார்கள் என்று சித்தரித்து அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை அல்ல என்றும் மனித குலத்திற்கு எதிரான போர்க்குற்றங்களில் இலங்கையின் அரசோ, இராணுவமோ ஈடுபடவில்லை என்றும் நிரூபிப்பதற்கான ஜனநாயகத் தீர்ப்பாக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலைப் பயன்படுத்த எல்லா வகைப்பிரயத்தனங்களையும் மோசடிகளையும் இந்த அரசு மேற்கொண்டுவருகிறது என்றார். (ம-7)

# ஆணொருவர் சடலமாக மீட்பு

(மதவாச்சி)

அநுராதபுரம், மதவாச்சிப் பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை (01) காலை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மதவாச்சி - உல்பத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவர் என இனங்காணப்பட்டுள்ள நிலையில்,

இது கொலையா? அல்லது உயிர்மாய்ப்பா? என்பது தொடர்பில் மதவாச்சிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)

### இலங்கை கணக்காளர் சேவை

# விசேட தரத்திற்கு 13 பேர் பதவி உயர்வு

இலங்கைக் கணக்காளர் சேவையின் விசேட தரத்திற்கு 13 பேர் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

28.04.2025 திகதி பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் இல: PSC/PRO/07/2180/2024 இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் 1 இல் உள்ள உத்தியோகத்தர்களை அவர்களின் பெயர்களுக்கு எதிராக குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து விசேட தரத்திற்கு உயர்த்துவதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி,

திருமதி டி.சி.மஹாணாமா, திருமதி எஸ்.சுரேஸ் ஜெனி, திருமதி கே.எஸ்.டி. திசாநாயக்க, கே.எல்.பி. ராஜகருணா, திருமதி எஸ்.எம்.டி.கே.ஜெயசிங்க, என்.எஸ்.ஆர். சிவரூபன், ஐ.எல்.சோமசிறி, D.W.S.ரஞ்சித், திருமதி என்.பி.ஏ.எல்.எம்.சமரசிங்க, டி.வி.பிரியந்த, எஸ்.டி.என்.ஏ.பாலிதா, திருமதி எச்.எம்.எம்.எச். கந்தனேகெதர, க.கமலரூபன் ஆகியோர் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (ம-4,7)

### தேர்தலுக்குப் பின்னர்

# மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் - நாமல்

(கொழும்பு)

தேர்தலுக்குப் பின்னர் மின்சாரக் கட்டணத்தை அரசாங்கம் நிச்சயம் அதிகரிக்கும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜே.வி.பி அரசாங்கம் 76 வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற வேலைத் திட்டங்களைச் சீரழிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதே தவிர புதிய வேலைத் திட்டங்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

பல இடங்களில் உண்மைக்குப் புறம்பான விடயங்களைக் கூறி வருகின்றனர்.

தேர்தலுக்குப் பின்னர் நிச்சயமாக தற்போதைய அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும்.

அதே போன்று அரசாங்கம் டீசல் மாஃபியாவை உருவாக்கும் வேலைத் திட்டத்தையும் முன்னெடுத்துள்ளது.

எனவே இதன் பாதிப்பு பொதுமக்களையே சென்றடையும்.

இவ்வாறான மாஃபியா நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக் கூடாதென அரசாங்கத்திடம் கோருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025–12.11.2026 வரை

## சப்தம ஸ்தானத்தில் வரும் ராகு சஞ்சலம் தந்திடும் நேரமிது!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



இதுவரை உங்கள் இராசிக்கு 8ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், 26.04.2025 அன்று 7ஆம் இடம் எனப்படும் களத்திர ஸ்தானத்தில் பெயர்ச்சியாகிறார். அதே சமயம் கேது பகவான் உங்கள் ஜென்ம ராசிக்கு வரப் போகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் அதே இடத்தில் சஞ்சரித்து, அங்குள்ள நட்சத்திரப் பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள். குறிப்பாக சப்தம ஸ்தானத்தில் வரும் ராகு சனியோடு இணைந்து செயற்படுவதால் நிதானமும், பொறுமையும் தேவைப்படும் நேரம் இது.

உங்கள் ராசிக்கு 7ஆம் இடமான சப்தம ஸ்தானத்திற்கு ராகு வருகிறார். அதனைக் களத்திர ஸ்தானம் என்பார்கள். எனவே வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் இடத் திற்கு ராகு பகவான் வருகிறார். இதன் விளைவாக திருமணம் கை கூடும். நிறைய வரன்கள் வந்து அலை மோதும். இட மாற்றம், வீடு மாற்றம் எளிதில் அமையும்.

ஜென்ம ராசியில் கேது சஞ்சரிப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லைகள் கூடுதலாகத் தான் இருக்கும். மாற்று மருத்துவம் உடல் நலத்தைச் சீராக்கும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணையலாம். மனப்பயம் இடையிடையே தலை தூக்கும். எதிர்மறை சிந்தனைகளால் சில குழப்பங்கள் ஏற்படும். புதியவர்களை நம்பி செயற்பட வேண்டாம். பொருளாதார நெருக்கடி அகலும். கணிசமான தொகை கைகளில் புரண்டாலும் உடனுக்குடன் செலவாகி கலக்கத்தையும் ஏற்படுத்தும்.

**குரு சாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, பஞ்சம - அஷ்டமாதிபதி குரு என்பதால் இக்காலத்தில் பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாங்க நினைத்த சொத்தை வாங்குவது, கொடுக்க நினைத்த சொத்தைக் கொடுப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பணியாளர்களால் ஏற்பட்ட நெருக்கடி அகலும். தொழிலில் முன்னேற்றம் கருதி முக்கியஸ்தர்களை சந்தித்து முடிவெடுப்பீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் வெற்றிகரமாக அமையும்.

**சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11.2025 முதல் 9.7.2026 வரை)**

சதய நட்சத்திரக்காலில் தனது சுய சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, விடிந்தது முதல் இரவு வரை வியர்வை சிந்த உழைக்கும் சூழ்நிலை உருவாகும். இழந்தவற்றைப் பெறமுடியாது என்றாலும் இயன்றவரை பாடுபடுவீர்கள். கணவன் - மனைவிக்குள் பிணக்குகள் கூடும். கணக்கு வழக்குகளைக் கச்சிதமாக வைத்துக் கொள்வது நல்லது. தொழில் போட்டி அதிகரிக்கும். அரசு வழி தொல்லைக்கும் ஆட்பட நேரிடும். வீடு மாற்றம், இட மாற்றம் நன்மை தரும்.

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, திருமணத் தடை அகலும், குழந்தை பாக்கியத்திற்காகக் காத்திருப்பவர்களுக்கு அது கை கூடும். புதியவர்களை நம்பிக் கொடுத்த பணம் இப்பொழுது கைக்கு வந்துசேரும். உடன் பிறப்புகளின் வழியே நடை பெறும் சுபகாரியத்தை முன் நின்று நடத்தி வைப்பீர்கள். வீடு கட்டும் பணி பாதியில் நிற்கிறதே என்ற கவலை அகலும்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்தரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் போது, சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் இருக்கிறீர்கள். எனவே மிகமிகக் கவனமாக இருக்க வேண்டும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் செலவுகள் வந்து சேரும். குடும்பத்தில் மூன்றாம் நபரின் தலையீட்டால் உறவினர் பகை அதிகரிக்கும், தொழில் கூட்டாளிகள் உங்களை விட்டு விலக நேரிடும். எதிர்மறை சிந்தனை அதிகரிக்கும். பொது வாழ்வில் இருப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாக நேரிடும்.




**சுக்ர சாரத்தில் கேது சஞ்சாரம் (28.6.2025 முதல் 5.3.2026 வரை)**

பூரம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. பயணங்கள் பலன் தரும் விதம் அமையும். நினைத்ததைச் சாதிக்கும் வல்லமை பிறக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டு புதிய வாகனங்களை வாங்கும் எண்ணம் கைகூடும். உடன் பிறப்புகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை. வாங்கிய இடத்தில் வீடு கட்டும் யோகம் உண்டு.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11.2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சம் கவனத்தோடு செயற்படுவது நல்லது. பணப் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் சில பிரச்சினைகள் வரலாம். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வீண் பழிச்சொல் வரலாம். புதிய முயற்சிகளில் ஈடுபடும் பொழுது அனுபவஸ்தர்களைக் கலந்து ஆலோசித்து செய்வது நல்லது. வாழ்க்கைத் துணையோடு பிரச்சினைகள் ஏற்பட்டு மனதை வாட வைக்கும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று சனி பகவான், மீன ராசிக்குப் பெயர்ச்சியாகி செல்கிறார். இதன் விளைவாக உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சனி அடியெடுத்து வைக்கிறார். எனவே விரயங்கள் மிக மிக அதிகரிக்கும். வீடு மாற்றம், இட மாற்றம் உறுதியாகும். உழைப்பு அதிகரிக்கும். ஊதியம் குறைவாகவே இருக்கும். குடும்பத்தில் எந்த நேரமும் சலசலப்பும், சச்சரவுகளும் ஏற்படும். கடமையில் தொய்வு ஏற்படும். உறவினர் பகை அதிகரிக்கும். சுப காரியங்களுக்காக செலவிட்டால் வீண் விரயங்களில் இருந்து விடுபட இயலும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு - கேது பெயர்ச்சி காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. வருகிற 11.5.2025 அன்று குரு பகவான், மிதுன ராசிக்குப் பெயர்ச்சியாகிறார். இதன் விளைவாக சகோதர ஒற்றுமை பலப்படும். உடன் பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் திருமண விழாக்களை முன் நின்று நடத்தி வைப்பீர்கள். தொழிலுக்கான மூலதனத்தை பெற்றோர் கொடுத்து உதவுவர். பெற்றோரின் மணி விழாக்கள், பவள விழாக்கள் நடத்த முடிவு செய்வீர்கள். ஒக்டோபர் 8ஆம் திகதி குரு பகவான், அதிசாரமாக கடக ராசிக்குச் செல்கிறார். இதன் விளைவாக எதிர்பார்த்த நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். மதிப்பும், மரியாதையும் உயரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவில்...

சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மக்களின் ஆணை மற்றும் அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், போக்குவரத்துத் துறையை புதிய நிலைக்குக் கொண்டு செல்ல ஒவ்வொரு துறையும் நெறிப்படுத்தப்படும் என்றார். (ம-7,4)

## யாழில்...

களின் பயன்பாட்டிற்காக நேற்று ஒப்படைக்கப்பட்டன.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மானத ஜகம்பத்தினால் யாழ்.மாவட்ட செயலர் பிரதீபனிடம் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட செயலர் கூறுகையில்,

வலி.வடக்கு வயாவிளான் பகுதியில் 20 ஏக்கர் காணிகளும் மாங்கொல்லைப் பகுதியில் 15 ஏக்கர் காணிகளும் வடமராட்சி கற்கோவளம் பகுதியில் 5.7 ஏக்கர் காணி நிலமுமாக சமார் 40.7 ஏக்கர் காணி நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து தெல்லிப்பளை ஜே/233 பகுதியில் 47 குடும்பங்களும் வயாவிளான் பகுதியில் 55 குடும்பங்களும் தமது பூர்வீக நிலங்களுக்குச் செல்லவுள்ளனர்.

இதேவேளை குறித்த காணிகளில் வெடிபொருட்கள் அபாயம் தொடர்பில் ஆராய்வு செய்யப்பட்டு அதன் பின்னர் மக்கள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இதேவேளை மேலும் சில காணிகளும் விரைவில் விடுவிக்கப்பட இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் (காணி) ஸ்ரீமோகன், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர், பருத்தித்துறை பிரதேச செயலர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-7,4,33)

## இலங்கை...

அமுலாகும் என 2025-04-25ஆம் திகதிய ஆணைக்குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிர்வாக சேவை விசேட தரத்திற்குத் தேர்வான 23 அதிகாரிகளில் 14 பேர் தமிழர்கள். ஒருவர் முஸ்லிம், 8 பேர் சிங்களவர்கள். பதவி உயர்வு பெறுவோர் பட்டியலில் எஸ்.சிவசிறி, எஸ்.முரளிதரன், என்.அச்சுதன், கே.சிறிமோகன், என்.மணிவண்ணன், என்.சிவலிங்கம், ரி.திரேஸ்குமார், ஏ.சோதிநாதன், சுபாகினி மதியழகன், எஸ்.சத்தியசீலன், பி.தயானந்தன், வை.பரந்தாமன், எம். சிறிஸ்காந்தகுமார் மற்றும் வி.மதுமதி ஆகியோர் தமிழர்கள் ஆவர். (ம-7,4)

## பல்கலை...

பகிடிவதை காரணமாக சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பபீடத்தின் இரண்டாம் வருட மாணவன் ஒருவர் தனது வீட்டில் தூக்கிட்டு உயிர்மாய்த்துக் கொண்டுள்ளார்.

புல்மஸ்லாவை - இஹலகம பகுதியைச் சேர்ந்த சரித் டில்ஷான் என்ற இளைஞனே நேற்று முன்தினம் தனது வீட்டில் உயிரை மாய்த்துக் கொண்டார்.

உயிர்மாய்ப்பு செய்து கொள்வதற்கு முன்னர் அவர் ஒரு கடிதத்தை எழுதியிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கடிதத்தில், அழுத்தம் தாங்க முடியாமல் இந்த முடிவை எடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் பகிடிவதைக்கு உள்ளாகி வந்ததாக அவரது பெற்றோர் குற்றம் சுமத்தினர்.

விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் பல்கலைக்கழக நிர்வாகமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இது தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,4)

## பயங்கரவாதத்...

தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் தற்போது தங்கியுள்ள இந்தக்குழுவே தமது அதிருப்தியை இலங்கை அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது. எனினும் தாம் விரைவில் பயங்கரவாதத் தடைச் சட்டதை இரத்துச் செய்யப் போவதாக அரசாங்கத் தரப்பினர் உறுதியளித்துள்ளனர்.

2017ஆம் ஆண்டு இலங்கை பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமைத் திட்டம் பிளஸுக்குத் தகுதி பெற்றது. இருப்பினும் இந்தத் திட்டத்தின் தற்போதைய விதிமுறைகள் அடுத்த ஆண்டு காலாவதியாகின்றன.

எனவே 2027ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரும் திருத்தப்பட்ட அளவுகோல்களின் கீழ் இலங்கை ஜி.எஸ்.பி பிளஸுக்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

இந்தநிலையில் இது தொடர்புடைய நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக ஐரோப்பிய ஒன்றியக்குழு 2025 ஏப்ரல் 28 முதல் மே 7 வரை இலங்கையில் தமது கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்டு வருகிறது.

இந்தக் கண்காணிப்பின்படி 27 சர்வதேச நியமங்களை நிறைவேற்ற வேண்டும். இதில் மனித உரிமையும் அடங்குகிறது. (ம-7,4)

## அரசு...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறைகூவல் விடுத்துள்ளார்.

தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த அறைகூவலை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என அநுர அரசாங்கம் உறுதியளித்திருந்தது. ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதென எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியவர்கள், இன்று மக்களை ஏமாற்றுகின்றனர்.

எனவே இந்த அரசாங்கத்துக்கு சிவப்பு எச்சரிக்கையை விடுப்பதற்காக, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை மக்கள் ஆதரிக்க வேண்டும்.

மக்களை எல்லா வழிகளிலும் ஏமாற்றிவரும் இந்த அரசாங்கத்துக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பாடம் கற்பிக்க வேண்டும். நாட்டு மக்களுக்கு உப்பைக்கூட பெற்றுக் கொடுக்க முடியாதவர்களே ஆட்சி பீடத்தில் உள்ளனர்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு அமுலில் இல்லை. பாதாளக்குழுக்கள் சட்டத்தைக் கையிலெடுத்துள்ளன. வீட்டுக்குள்ளும், நடுத்தெருவிலும் கொலைகள் இடம்பெறுகின்றன. நீதிமன்றத்துக்குள்கூட துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் நிலைமை காணப்படுகின்றது. காட்டாட்சியே நாட்டில் நிலவுகின்றது" என்றார். (ம-7,4)

### மஹஜன சம்பத
திகதி 2025.05.01
சீட்டிழுப்பு இலக்கம் 5818
E 3 4 1 2 5 6
அத சம்பத: E 1 2 5 6
சீட்டிழுப்பு இலக்கம் 0393

### தன நிதானய
திகதி - 2025.05.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1848
T 51 64 70 82 T
60590

### மெகா பவர்
திகதி 01/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2166
O 04 09 33 39 76

### ஜய (JAYA)
திகதி 2025.05.01
சீட்டிழுப்பு இலக்கம் 086
F 3 3 2 0

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4060
சீட்டிழுப்பு திகதி 01.05.2025
T 16 45 55 57
T

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.01
சீட்டிழுப்பு இலக்கம் 1127
இடபம் 06 29 33 40 இடபம்
52741 13

### உத்தியோகபூர்வ முடிவுகள்
01.05.2025 வெற்றி வாரம் 526
C 9 0 3 1 3 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36,456,866.80
79908

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2792
சீட்டிழுப்பு திகதி 2025.05.01 தினம் வியாழக்கிழமை
16 33 48 72 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,411,545.60

### சனிதா
திகதி 01.05.2025 வெற்றி வாரம் 4953
09 23 57 63 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,244,652.80
71216

### சசிரி
வெற்றி வாரம் 673
01.05.2025 வியாழக்கிழமை
06 24 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4504
சீட்டிழுப்பு திகதி 01.05.2025 தினம் வியாழக்கிழமை
07 13 15 17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,104,884.40
150706

### கப்ருக
1968
01.05.2025 வியாழக்கிழமை
P 38 21 26 28 35
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.573,634,146.60

### அத கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம் 2618
சீட்டிழுப்பு திகதி 2025.05.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,141,630.40
11 26 29 72 S
454074

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நன்றி பாராட்டுதல்
## DCM நிறுவனத்திற்கு

2024 ஆம் ஆண்டு A/L பரீட்சைப் பெறுபேற்றில் கலை, வர்த்தகப் பிரிவுகளில் யாழ். மாவட்ட ரீதியாக முதல் நிலைகளைப் பெறுவதற்கு அயராது உழைத்த **DCM** நிறுவன நிர்வாகி மற்றும் துறைசார் நிபுணத்துவம் கொண்ட ஆசிரியர் குழாமிற்கு பெற்றோர் சார்பாக மனம் நிறைந்த நன்றிகள்.

ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன் கூடிய கல்வியை வழங்கு கின்ற யாழ்.நகர் முன்னணி நிறுவனமாகிய **DCM** கல்வி நிறுவனத்திற்கு நன்றிகள்.

– பெற்றோர்கள்

# மலிவு விலையில்
## கோழிகள், முட்டைகள் விற்பனைக்குண்டு

35 வருடப் பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளர் நலன் கருதி எமது நிறுவனத்தின் அனைத்துக் கிளைகளிலும் ஒரே விலையில் எல்லாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

**02.05.2025 இன்றைய விலை விபரம்**

சுத்தம் செய்யப்பட்ட புறோயிலர் இறைச்சி - 1Kg 850/=
உயிர் நிறை - 1Kg 550/=
1 முட்டை - 27/=

இவை அனைத்தும் 24 மணி நேரமும் எமது கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

கிளை 1 நியூ சிற்றி கோழிக் கடை – பொம்மைவெளி, காரைநகர் பிரதான வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
கிளை 2 நியூ சிற்றி கோழிக் கடை – இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
கிளை 3 நியூ சிற்றி கோழிக் கடை – உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற் வீதி, உரும்பிராய் கிழக்கு, யாழ்ப்பாணம்.

எமது தலைமைக் காரியாலயம் நியூ சிற்றி பாம் & நியூ சிற்றி கோழிக்கடை இல.4 குறுக்குத் தெரு, குருநகர் சந்தை முன்பாக யாழ்ப்பாணம்.
(4086)

# உடனடி வேலை வாய்ப்பு
## நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2867)

# வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurantற்கு வேலையாட்கள் தேவை
(4064)

**076 830 3931**

# தேவை

நிறுவனத்தின் கிளை ஒன்றிற்கு விற்பனையாளர் தேவை.
இடம் - மல்லாகம்
ஆண், பெண் இருபாலரும்
அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு :
(1083)

**076 440 0816**

# ஊர் கோழிக் குஞ்சுகள்



ஒரு நாள் ஊர்க்கோழி குஞ்சுகளை தினமும் பெற்றுக்கொள்ளலாம்.
(1082)

**077 332 2433**

# அறிவித்தல்

யாழ்/ யாழ் இசைக் கலையகம் நடாத்தும் மாபெரும் "சிலோன் சிங்கர்" பாடல் போட்டி - 2025
குருநகர் சனசமூக நிலைய கலையரங்கு
02.05.2025 மாலை 2.30

எம்மால் விநியோகிக்கப்பட்ட நுழைவுச் சீட்டுக்களில் இறுதிப்போட்டி 25.05.2025 என அச்சிடப்பட்டுள்ளது. குறித்த போட்டி 02.05.2025 இன்றையதினம் நடைபெறும். சிரமத்திற்கு மனம் வருந்துகின்றோம்.

ஏற்பாட்டுக் குழு
இரா.மதிகரன்
இயக்குனர்
யாழ். இசை கலையகம், யாழ்ப்பாணம்.
(4084)
077 904 4233

# பட்டா சாரதி தேவை
## (Batta Driver)

♦ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
♦ யாழ். நகரிலிருந்து 7 Km தொலைவிற்குள் இருத்தல் வேண்டும்.
(4081)

**076 731 5464**

# Village Hotel
## Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
(3982)

**077 544 8503**

# அறிவித்தல்

**076 XXX X523**

மேற்படி தொடர்பு இலக்கம் எமது சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் பொதுமக்கள் மேற்படி தொடர்பிலக்கத்துடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்

ஈ – சன்ஸ்
(C-2868)

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613

# SCIENCE PEARL
(பெருமாள் கோவில் முன்) யாழ்ப்பாணம்

## A/L DAY CLASS

இரசாயனவியல் (10.15AM)
**J.J.கொலின்ஸ்**
(அசேதன இரசாயனம், அவத்தை சமநிலை)
பௌதீகவியல் (12.00PM)
சடப் பொருளியல்
**M.ஆனந்தன்**
(4085)

ஆரம்பம் : 05.05.2025(திங்கள்)

மாலை நேர பிரிவு ஆரம்பம்
பௌதிகவியல் : M.ஸ்பெல்மன், M.கருணாநிதி
இணைந்த கணிதம் : B.மயூரன்
இரசாயனவியல் : T.லக்ஷன்
ஆண்டு ரீதியான இரசாயனவியல் MCQ வினாவிடை சனி, ஞாயிறு ஆரம்பமாகின்றது.
A/L 2027 ஆரம்பமாகிவிட்டது

**Ph : 077 703 1125**

# மணப்பெண் தேவை

1. கொல்லன்கலட்டி, இந்து, 1991, அனுஷம், MSc, Denmark Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
2. காரைநகர் - நவாலி, இந்து, 1992, சுவாதி, Bachelor, Newzerland + Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
3. காரைநகர், இந்து, 1988, உத்திரட்டாதி, BSc(Hons) மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. சுதுமலை, இந்து, 1989, உத்தரம், Senior Software Engineer, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
5. நல்லூர், இந்து, 1987, அத்தம், BA(Hons), Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
6. Jaffna town, இந்து, 1991 உத்தரம், CIMA, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
7. கரம்பன், இந்து, 1992, உத்தராடம், BSc மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
8. உடுப்பிட்டி - பருத்தித்துறை, இந்து, 1990, திருவோணம், HNDA, USA citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
9. சுன்னாகம் - தெல்லிப்பளை, இந்து, 1992, ரேவதி, Civil Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(1077)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193

# யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை

**உணவகம் மற்றும் தங்ககம் (Hotel & Restaurant)**
- முகாமையாளர் (Manager)
- மேற்பார்வையாளர் (Supervisor)
- உணவு பரிமாறுபவர் (waiters)
- சமையலாளர் (Cooks)
- சமையல் உதவியாளர் (Kitchen Helper)
- அறை பராமரிப்பாளர் (House Keeping Staff)
- சுத்திகரிப்பாளர்கள் (Cleaners)

உணவு, தங்குமிடம் இலவசம்

**எரிபொருள் நிரப்பு நிலையம் (Petrol shed)**
- முகாமையாளர் (Manager)
- எரிபொருள் நிரப்புனர் (Pumpers)
- சுத்திகரிப்பாளர்கள் (Cleaners)

தங்குமிடம் இலவசம்
(C-2869)

**070 222 7100, 021 222 7100**

Tamil & English Medium
# A/L கணக்கீடு

A/L 2024 Rank(Jaff) 2, 5, 10 அதிகூடிய A மற்றும் B சித்திகள் A/L 2024 பெறுபேறு யாழ் நகரில் மாணவர்கள், பெற்றோர்களின் நன்மதிப்பினைப் பெற்றுக் கொண்ட ஆசிரியர்

**MR.K.BALAKAJEN SLTS**
(Tutorial Staff)

புதிய தவணைக்கான புதிய தேர்ச்சிகள் A/L 2025& DAY, A/L 2026, A/L 2027 ஆரம்பமாகின்றது.
உங்களுக்கான தனிப்பட்ட அனுமதி வழங்கப்படுகின்றது
(C-2789)

NEC- யாழ் நகர் | KBK- கந்தர்மடம்
KBK- கொழும்புத்துறை | ST- மீசாலை
KBK - Zoom online Classes

உங்கள் புதிய அனுமதிகள் மற்றும் நேர அட்டவணைக்கு
**077 452 0043**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org